OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-12-15
PERIODICALS DIVISION
LIBRARY

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்
மலர் 22 கார்த்திகை 26 ஸபர் 2 இதழ் 302
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11-12-80

# யாழ். ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் பற்றுக்குறை

## பாராளுமன்றத்தில் 'யோகேஸ்'

(கொழும்பு)

''யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில்டாக்டர்கள் பற்றுக்குறை நிலவிவருகிறது. அத்துடன் மருந்துவகைகளும் தட்டுப்பாடாகவுள்ளது''.

மேற்கண்டவாறு யாழ் எம். பி திரு வெ. யோகேஸ்வரன் பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சின் வரவுசெலவுதிட்ட குழுநிலைவிவாதத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ''டாக்டர்களினதும், தாதிமார்களினதும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்'' என்றார். (வெ)

# ஜன.12ல் கலவான இடைத்தேர்தல்!

## அறுவர் வேட்புமனுத் தாக்கல்

(கொழும்பு)

கலவானத் தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. பிலப்பிட்டியாவே தொடர்ந்தும் இருப்பாரென சபாநாயகர் நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தபோதிலும் நேற்று இத்தொகுதி இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இடைத்தேர்தல் அடுத்தாண்டு ஜனவரி மாதம் 12-ம் திகதி நடைபெறுமென தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் உத்தரவை அடுத்தே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த இடைத் தேர்தலுக்கான அபேட்சகர்களின் நியமனப்பத்திரங்களை இரத்தினபுரி கச்சேரியில் வைத்துநேற்றுக் காலை இரத்தினபுரி அரசாங்க அதிபர் திரு. ஏ. எம். பி வெலிகம்பொல ஏற்றுக்கொண்டார்.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியைச்சேர்ந்த திரு. சாத் முத் தெட்டுவேகம, சுயேச்சையாளர்களாக திரு. எஸ். டி. சாணதாச, திரு. எஸ். டபிள்யூ. அபேயநாயக்கா, திரு. எம். டபிள்யூ. ஜெயசூரியா, திரு. லயனல் டீ சில்வா அபயவீர குணசேகரா, திரு. அபேய வர்த்தன, திரு. ரணசிங்க பிரேமதாசா ஆகிய ஆறு பேரும் இவ்விடைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல்செய்துள்ளனர்.

# யாழ். பல்கலைக்கழகத்திற்கு மேலும் ஒருகோடி ரூபா

## குறைநிரப்பு மதிப்பீட்டுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழகத்தில் மேலதிககட்டடங்களை அமைப்பதற்காக மேலும் ஒரு கோடி ரூபாவை ஒதுக்குவதென்று அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கான குறைநிரப்பு மதிப்பீட்டை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

மருத்துவம், கணிதம், பௌதிகவியல் பீடங்களுக்கான கட்டிடங்களையும் நூல் நிலையத்தையும் அமைக்க இந் நிதி பயன்படுத்தப்படும். (இ)

# சீமெந்துதொழிற்சாலைகளில் எண்ணைக்குப் பதில் நிலக்கரி

(கொழும்பு)

சீமெந்து தொழிற்சாலைகளில் எண்ணைக்குப் பதிலாக நிலக்கரியைப் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

சீமெந்து தொழிற்சாலைகளில் எண்ணைக்குப் பதிலாக நிலக்கரியைப் பயன்படுத்துவதால் முதல் ஆண்டே 6 கோடியே 80 லட்சம் ரூபாவைச் சேமிக்கமுடியும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார். (இ)

# ''வித்துவான் கந்தையாவின் சைவ ஆலய வரலாறு'' நூல்

## இந்து கலாச்சார திணைக்களத்தின் நன்கொடை ரூ. 5000 பெற்றது

மட்டக்களப்பு

பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் இந்து கலாச்சார திணைக்களத்தின், சைவ நூல் ஊக்குவிப்பு நன்கொடை; பண்டிதர், வித்துவான் திரு. வி சீ. கந்தையாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற அதிபரான வித்துவான் வி சீ. கந்தையாவினால் எழுதப்பட்டு, பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் இந்துக் கலாச்சாரத் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்படவுள்ள 'மட்டக்களப்பு சைவஆலய வரலாறு'' முதல் பதிப்பு நூல்தான் நூல் ஊக்குவிப்பதற்கான நன்கொடையைப் பெற்றுள்ளது. நன்கொடைப்பணமான ஐயாயிரம் ரூபாவுக்கான காசோலையை, மட்டுநகர் முதல்வரும், பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை, வித்துவான் வி. சீ. கந்தையாவின் இல்லத்திற்குச் சென்று கையளித்தார்.

உடல்நலக் குறைவான வித்துவான் மதுரையில் நடைபெறவுள்ள தமிழாராய்ச்சி மகாநாட்டில் தனது பாரியார் திருமதி கங்கேஸ்வரி கந்தையாவுடன் கலந்துகொள்கிறார்.

வித்துவான் வீ. சீ. கந்தையாவினால் எழுதப்பட்ட ''மட்டக்களப்புத் தமிழகம்'', மட்டக்களப்பு மான்மியம், வடமோடி நாட்டுக்கூத்து, தென்மோடி நாட்டுக்கூத்து ஆகிய நூல்கள் மிகவும் பிரபல்யம்வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

# இரு பாடங்கள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாளை ஆரம்பமாகும் ஜி. சி. ஈ. சாதாரணதர (புதியபாடத் திட்டம்) பரீட்சையில்நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெற இருந்த சமயம், தொழில் முன்னிலைப்பாடம் ஆகியவற்றுக்கான பரீட்சை இம்மாதம் 22ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப் பாடங்களின் வினாத்தாள்கள் அச்சிடுவதில் ஏற்பட்ட தாமதமே இவை ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டது. (இ)

# எம்.ஜி.ஆர். மீது கருணாநிதி கொலைமுயற்சி வழக்கு

## செயலாளரிடம் அனுமதிகேட்டுள்ளார்

சென்னை, டிச 10

தி. மு க. தலைவர் திரு. மு. கருணாநிதியின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டதாக தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரனின்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட உள்ளது.

திரு. இராமச்சந்திரன்மீது வழக்குத் தொடர தமக்கு அனுமதிவழங்குமாறு திரு கருணாநிதி தமிழக தலைமைச் செயலாளரிடம் மனுச் செய்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மணியாச்சி ரயில்நிலையத்தில் இடம்பெற்ற கத்திவீச் சுச்சம்பவத்தைப் பயன்படுத்தும் எம் ஜி ஆர். பொதுமக்கள்முன் தமது கௌரவத்துக்கு இழப்பை ஏற்படுத்தும் வகையில பொதுக் கூட்டங்களில் உரையாற்றியும் பொலிசாரைத் தூண்டிவிட்டும் தமது உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் நடந்துகொள்வதனால் அவர் மீது வழக்குத் தொடர அனுமதிவழங்குமாறு திரு கருணாநிதி தமது மனுவில் கேட்டுள்ளார். (இ)

# சுலோக அட்டைகளுடன் யாழ்.நகரில் உண்ணாவிரதம்!

(யாழ்ப்பாணம்)

ஐ நா மனித உரிமைகள் தினத்தையொட்டி, தந்தை செல்வா நினைவாலயத்தில் மனித உரிமைகள் நடவடிக்கைக் குழுவினர், சுலோக அட்டைகளுடன் நேற்று காலை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்

டாக்டர் எஸ் ஏ தருமலிங்கம், ஈழவேந்தன், கோவை மகேசன், பொன். பூலோகசிங்கம் உட்பட சுமார் 35 பேர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

''ஐ. நா. தமிழ் ஈழத்தை அங்கீகரிக்க வேண்டும்'', ''6 கோடி தமிழரின் தாயகம் தமிழ் ஈழம்'', 'வேலைநிறுத்தம் தொழிலாளரின் உரிமை', 'வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளருக்கு வேலைவழங்குக', 'பயங்கரவாதத்தடை சட்டத்தை நீக்குக', 'தமிழ் ஈழத்தில் சிங்களவரைக் குடியேற்றாதே' போன்ற சுலோகங்கள், அட்டைகளில் காணப்பட்டன.

காலை 9 மணிக்கு ஆரம்பமான உண்ணாவிரதம் பகல் 12 மணிக்கு முடிவுற்றது. (க

# 'கதிரி'யின் ஜீப்புக்குக் கிடைத்தகதி!

(யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அமரர் கே .வி நித்தியானந்தாவின் நூல்கள் பலவற்றை சர்வதேச ஆய்வு ஆவணக்குழுவின் மூலம் நன்கொடையாக வழங்குவதற்கு கோப்பாய் எம் பி யும் தமிழர் விடுத

(8ம் பக்கம் பார்க்க)

# போலந்தில் சோவியத்படை ஊடுருவல்!

## இந்தியப் பத்திரிகைகள் செய்தி; ரஷ்ய அதிகாரி மறுப்பு

புதுடில்லி, டிச 10

சோவியத் யூனியனின் படைப்பிரிவுகள் போலந்துக்குள் ஊடுருவியுள்ளன என இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளையில் இச்செய்திகள் முற்றிலும் பொய்யானவையென சோவியத் அதிபர் திரு லியோனிஸ்ட் பிரஷ்னேவுடன் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யும் சோவியத் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்தியாவில் உள்ள சோவியத் தூதரகத்தில் இந்தியப் பத்திரிகையாளர்களை அழைத்து நடத்திய மகாநாட்டிலேயே அந்த அதிகாரி மறுப்புத் தெரிவித்தார்.

இச் செய்தி குறித்து பாராளுமன்றத்தில் இன்று பிரஸ்தாபிக்க எதிர் கட்சியினர் இவ்விவகாரம் தொடர்பாக அரசு விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்று கேட்டுள்ளனர். (இ)

இன்று குதூகல ஆரம்பம்!
ஒட்டோ சப்ளையர்ஸ்
யாழ். 317, மணிக்கூட்டு வீதியில் B M C. அருகில் தமது மூன்றாவது கிளை ஸ்தாபனத்தை இன்றிரவு (11-12-1980 10-00 மணியளவில் திறக்க இருப்பதனை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.
223, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8168. 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7665 [7584]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்
பரந்தன்

## வெற்றுச்சாக்கு விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்தில் வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு சாக்குகளை காரியாலய வேலை நேரத்தில் பார்வையிடலாம்.

விண்ணப்பங்கள் யாவும் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்குகளுக்கான கேள்வி விண்ணப்பம் என எழுதி, தலைவர், கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் என்ற முகவரிக்கு 15-12-1980க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தினை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

7581

---

## கேள்வி விளம்பரம்

உடுவில்
கிராமாட்சி மன்றம்

இக் கிராமாட்சி மன்றத்திற்குரிய இணுவில் சந்தையில் அமைந்திருக்கும் ஆட்டிறைச்சிக்கடை 01-01-81 தொடக்கம் 31-12-81 வரைக்கும் கட்டுப்பாட்டு விலைக்கு இறைச்சி விற்பனைசெய்வதற்கான கேள்விகள் என்னால் 24-12-80 நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் ரூபா 35/- கேள்விப் பிணைப்பணமாகவும், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10/-ம் செலுத்துவதன்மூலம் 23-12-80 பிற்பகல் 3-30 மணிவரைவழங்கப்படும்.

மேலும் இக்கிராமாட்சி மன்றத்தின் இணுவில் சந்தையினை 01-01-81 தொடக்கம் 31-12-81 வரை நடாத்துவதற்கான குத்தகை என்னால் 24-12-80 பிற்பகல் 2-00 மணியளவில் குறித்த சந்தை வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். குத்தகை கேள்விகேட்க விரும்புவோர் குத்தகைக் கேள்விப் பிணையாக ரூபா 25/- இனை 23-12-80 பிற்பகல் 3-30க்கு முன்னதாக செலுத்துதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஏ. சீ. செபநாயகம்
விசேட ஆணையாளர்,
உடுவில் கிராமாட்சி மன்றம்
கிராமசபை அலுவலகம்,
உடுவில், சுன்னாகம்.
1980-12-09.

7579

---

## இரு புதிய...

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

டொன்பொஸ்கோ மடத்தில் ஆறு மாதம் படிப்பை மேற்கொண்டார்கள். இவர்கள் தங்கள் நவசந்நியாசப்படிப்பை யாத்தனையில் மேற்கொள்வார்கள். (அ)

---

ஊர்காவற்றுறைப்
பட்டினசபை

## பழைய கடை அறைகள் குத்தகை கேள்விப் பத்திர அறிவித்தல் 1981 – 82

கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள விடயங்களுக்குப் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் 23-12-80 செவ்வாய்க்கிழமை காலை 11-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் பத்திரப்பணமாக ரூபா 15/-ம் கேள்விப் பிணைப்பணமாக ரூபா 25/-ம் காரியாலயத்தில் செலுத்தி 22-12-80 பிற்பகல் 3-30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. கேள்விப் பிணைப்பணம் மட்டுமே மீளளிப்புச் செய்யப்படும்.

### அட்டவணை

1. கடை அறைகள் இலக்கம்: 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10.
2. கருவாட்டுக்கடை.
3. மாட்டிறைச்சிக்கடை இல. 2.

### நிபந்தனை

1. மாதாந்த வாடகைக்கு மேலாக கேட்கப்படும் கூடுதல் உரிமைப்பண அடிப்படையில் கடை அறைகள் வழங்கப்படும்.
2. கடை வாடகைப்பணம் நிலுவையிலுள்ள எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.
3. கேள்விகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ முழு அதிகாரமும் பட்டினசபை விசேட ஆணையாளருக்கு உண்டு.
4. மேல்விபரங்களை இக் காரியாலய அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம்
எஸ். சாள்ஸ் பொன்கலன்.
விசேட ஆணையாளர்,
பட்டினசபை,
ஊர்காவற்றுறை.

பட்டினசபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
8-12-1980.

(7580)

---

## கருணாகரன் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

சங்கீத வித்துவான் திரு. ஏ. கே. கருணாகரனின் கர்நாடக இசைக்கச்சேரி அகிலஇலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஆதரவில் இம்மாதம் 13-ம் திகதி சனிக்கிழமை மாலை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். (அ)

---

## நடப்பு வருட உத்தியோகத்தர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிகை அலங்கரிப்பாளர் ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்கள் பின்வருமாறு:-

தலைவர்- கா. முத்துக்கிருஷ்ணன். உப தலைவர்- செ. செல்வராசா. செயலாளர்- மா. நேசராசா. உப செயலாளர். வே. சந்திரன். தனாதிகாரி- அ. றொபட். உப தனாதிகாரி இ. பாலகுரூஸ்.

ஆறுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

## வெற்றுச்சாக்கு விற்பனைக்கான கேள்விப்பத்திரம்

கரைதுறைப்பற்று ப. நோ. கூட்டுறவுச் சங்கம் 5100 சாக்குகளைக் கேள்விப்பத்திரமூலம் விற்பனைசெய்யத் தீர்மானித்துள்ளது. இதில் 3500 சாக்குகள் முல்லைத்தீவு ஸ்ரோரிலும் 1600 சாக்குகள் புதுக்குடியிருப்பு ஸ்ரோரிலும் உண்டு. கேள்வி கோர விரும்புவோர் 26-12-80-ம் திகதிக்கு முன்னதாக தலைவர், கரைதுறைப் பற்று ப. நோ. கூ. சங்கம் என்ற விலாசத்திற்குக் கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் சாக்கு கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடுதல் வேண்டும். முடிவுத் திகதிக்குப்பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்வி கோருவோர் மீளப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 250/- இச்சங்கத்தில் கட்டிப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய காரியாலய நாட்களில் முல்லைத்தீவு ஸ்ரோரிலும், வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் புதுக்குடியிருப்பு ஸ்ரோரிலும் பார்வையிடலாம். சாக்கை நீங்கள் பார்வையிட்டே தரம் பிரித்து விலை நிர்ணயித்து எமக்கு அனுப்ப வேண்டும். நீங்கள் அனுப்பிய விலைப்படியே தெரிவு நடைபெறும். தெரிவுசெய்யப்பட்டவர் சாக்கைப்பெறும்போது விலையிலோ, சாக்கிலோ எதுவித மாற்றமும் செய்ய அனுமதிக்கமாட்டோம்.

பொதுமுகாமையாளர்.
5-12-80

7582

---

## பிரதமருக்கு வரவேற்பு

(உடுப்பிட்டி)

எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள மாதிரிக் கிராமமான கரவெட்டி - கன்பொல்லை மாதிரிக்கிராமத்தைத் திறந்து வைப்பதற்காக வருகை தரும் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவிற்கு உடுப்பிட்டித் தொகுதி ஐக்கியதேசியக் கட்சிக்கிளை வரவேற்பொன்றை அளிக்கவுள்ளது.

இவ் வரவேற்புக்கான ஒழுங்குகளை உடுப்பிட்டித்தொகுதி ஐக்கியதேசியக் கட்சியின் அமைப்பாளர் திரு. எஸ். பொன்னம்பலம் மேற்கொண்டுள்ளார். (வெ)

---

## திருமலை....

(4-ம் பக்கத் தொடர்ச்சி

பொதுவாக நகர மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வடிகால் திட்டம், நவீன பஸ் நிலையம், நவீன சந்தை என்பன தீர்ந்தபாடில்லை. மின்சாரத்தைப் பொறுத்த மட்டில் 1971-ம் ஆண்டுக்கு முன் ஓரளவு ஒழுங்காக கிடைத்து வந்தது. தற்பொழுது லக்ஷபான ஜல மின்சக்தியின் மூலம் கிடைக்கும் மின்சாரம் ஒழுங்காகக் கிடைப்பதில்லை. காரணம் மாதம் குறைந்தது இரு தடவைகளாவது மின்சாரம் திடீர் என்று இல்லாமல் போகும் சில நாட்களில் நகரில் ஒரு பகுதிக்கு மின்சாரம் இருக்கும் இன்னொரு பகுதி இருட்டாக இருக்கும்.

எங்கிருந்தோ வந்த பெட்டிக் கடைக்காரர்களினால் பரம்பரையாக திருகோணமலையில் வாழும் மக்களுக்கு ஒரு நவீன பஸ் நிலையமோ, நவீன சந்தையோ அமைக்கமுடியாத நிலை இருந்துவருகின்றது. இவ் விசயத்தில் அரசுகூட மக்கள் பிரதிநிதிகளின் வேண்டுகோளை உதாசீனம் செய்துவருவது ஜனநாயகம் ஆகாது. ஒரு உண்மையான ஜனநாயகநாட்டில் மக்களின் பிரதிநிதிகளின் வேண்டுகோளை பூர்த்தி செய்வதே மரபு. திருகோணமலைத் தொகுதியைப் பொறுத்த மட்டில் மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கை பலதரப்பட்ட விஷயங்களில் அரசாங்கத்தினால் தட்டிக்களிக்கப்பட்டுள்ளது

குறிப்பாக நகரின் முக்கிய வீதியான திருஞானசம்பந்தர் வீதியை நவீனமயப்படுத்தும்படி அவ்வீதி மக்கள் பல விண்ணப்பங்களை நகராட்சி மன்றத்திற்கும் பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பியும் அவ்வீதி நவீன மயப்படுத்தப்படவில்லை தற்போதைய நகராட்சி மன்றத்தின் சீர்திருத்தம் 'ஆமை' வேகத்தில் செல்வதால் நகர மக்கள் எப்பொழுது எங்கள் நகரம் முன்னேறும் என்ற அங்கலாய்ப்பில் இருக்கின்றார்கள்.

மற்றும் திருகோணமலை நகர மக்களின் நீண்டகாலத்தேவையான ஆயுர்வேத மருந்துச் சாலை ஒன்றை அமைப்பது பற்றி நகராட்சிமன்றம் கூடிய கவனம் செலுத்தவேண்டும் அத்துடன் திருகோணமலை மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகமாக இருப்பது பொதுநூலகம் ஆகும். அதில் சட்டம், வைத்தியம் போன்ற நூல்கள் போதியளவு இடம்பெறச்செய்வதுடன் சட்டத்திற்கு ஒரு தனிப்பிரிவை உருவாக்கவும். புதிதாக நிறுவப்பட்டுவரும் நூல் நிலையத்தில் அவை பூர்த்தி செய்யப்படும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

திருகோணமலை நகரில் சகல தேவைகளும் பெறக்கூடிய முறையில் நவீன நகரமாக மாற்றி அமைக்க நகராட்சி மன்றத்தினரும், பாராளுமன்ற உறுப்பினரும் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு அளிக்க வேண்டியது அவசியமாகும்.

என். மகேந்திரன்,
திருகோணமலை.

---


ஒரு குடும்பப் பெண்ணின் சோகவரலாறு

ஒரு தலைகாதல்

ராணியில்
(யாழ்ப்பாணம்)
நாளை
காணத்தயாராகுங்கள்!


---


பரந்தன் இரசாயன பொருட்கள் கூட்டுத்தாபனம்

தொழில் ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல்

1981-ம் ஆண்டு பரந்தன் இரசாயன பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் காலத்திற்குக் காலம் தொழில் ஒப்பந்த வேலைகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை பரந்தன் இரசாயன பொருட்கள் கூட்டுத்தாபன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் தபால் மூலமாகவோ அல்லது பரந்தன் இரசாயன பொருட்கள் கூட்டுத்தாபன அலுவலகத்தில் இதற்கென உள்ள கேள்விப்பெட்டியிலோ சேர்க்கப்படலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 31–12–1980

விநியோக முகாமையாளர்,
பரந்தன் இரசாயன பொருட்கள் கூட்டுத்தாபனம்,
பரந்தன்.

(7566)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தான் பிரச்னைக்கு விரைவில் அரசியல் தீர்வு!

## பிரஷ்னேவ் -- இந்திரா நம்பிக்கை

புதுடில்லி, டிச. 10

ஆப்கானிஸ்தான் பிரச்னைக்கு விரைவில் அரசியல் தீர்வொன்றைக் காணுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மேற்கண்டவாறு இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள சோவியத் ஜனாதிபதி திரு. லியோனிஸ்ட் பிரஷ்னேவும், இந்தியப்பிரதமந்திரி திருமதி இந்திராகாந்தியும் நடத்திய பேச்சுவார்த்தைகளில் தெரிவித்தனர்.

அவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஆப்கானிஸ்தான் பிரச்னைக்கு அணிசேரா இயக்கத்தின் கொள்கைக்கமைய தீர்வு காணப்படும்.

சோவியத்-இந்திய வர்த்தகமும், பொருளாதாரமும் வலுப்படுத்தப்படும் இவ்விரு நாடுகளுக்குமிடையேயான உறவுகள் உலகில் அமைதியையும், உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

ஒரு நாடுமற்றொரு நாட்டின் மீது எந்தவொரு வகையிலும் ஆதிக்கம் செலுத்துவதையோ அல்லது வெளியார் தலையீட்டையோ மன்னிக்கமுடியாதென்றஸ்திரமானகருத்தையே இந்தியா தொடர்ந்தும் பின்பற்றி வருவதாக இப்பேச்சுவார்த்தையின்போது தெரிவிக்கப்பட்டது பாகிஸ்தான்-சீன உறவுகள் பற்றியும், பாகிஸ்தான் அணு ஆயுதங்களைப்பெற முயல்வது பற்றியும் இப்பேச்சுவார்த்தையின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் தொடர்பாக சிம்லா உடன்படிக்கையை இந்தியா தொடர்ந்தும் பின்பற்றிவருமென திருமதி இந்திரா காந்தி இப்பேச்சுவார்த்தையின்போது தெரிவித்தார். (வெ)

## அதிகாலையில் நிகழ்ந்த ரூபா 22,000 திருட்டு!

(மாவிட்டபுரம்)

அதிகாலை நேரம் கடையொன்றை உடைத்து இனந்தெரியாதவர்கள் அங்கிருந்த 22 ஆயிரம் ரூபாபெறுமதியான நகை, பணம், காசோலை போன்றவற்றைத் திருடிச் சென்றுவிட்டனர்.

மாவிட்டபுரம் புகையிரத நிலையத்திற் கருகாமையிலுள்ள வே. சந்திரன் என்பரதுகடையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்தது.

கடையிலிருந்த இவர் அதிகாலை எழுந்து வீட்டுக்குச் சென்றுவிட்டு திரும்பிவருவதற்கு இத்திருட்டு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடையினுள்ளிருந்த தங்கச் சங்கிலிகள், காப்புகள், கடிகாரம். காசோலை, 5285 ரூபா ரொக்கப்பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை பொலிசில் புகார் தெரிவிக்கப்பட்டதன் பேரில் சப் இன்ஸ்பெக்டர் வீரசிங்க, சாஜன்ட் சபாரத்தினம் ஆகியோர் தலைமையிலான பொலிஸ்கோஷ்டி இது குறித்து விசாரணை செய்துவருகிறது. ஒருவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

# இந்திய - சோவியத் உறவு

## உறுதியும் செழுமையும் உள்ளது

### தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். கருத்து

சென்னை, டிச. 10

''சோவியத் ஜனாதிபதியின் இந்திய விஜயம் எமது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு, ஒத்துழைப்பு உறவுகளை வலுப்படுத்துமென்றுநாம் நம்புகிறோம்''.

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். மச்சந்திரன் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். அவர் அப்பேட்டியில் தொடர்ந்து கூறியதாவது:

''இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையிலான நட்புறவுகள் சோதனைக் காலங்களில் நின்று பிடித்து, உறுதியும் செழுமையும் பெற்றுவருவது மட்டுமல்ல, கடந்த சில ஆண்டுகளில் மேலும் வலுப்பெற்றுள்ளது எமக்குப் பெருமையளிக்கிறது. இந்தியாவின் சர்வதேச உறவுகளில் புகழார்ந்த அத்தியாயத்தைக் கொண்டுள்ள இந்திய- சோவிய நட்புறவுகள், இரு பெரிய நாடுகள் எவ்வாறு தமது சுதந்திரத்தையும் கலாசாரத்தையும் பேணியவாறு, பரஸ்பர மதிப்புடன்பரஸ்பர அனுகூலங்களுக்காக உலகின் நன்மைக்காக எவ்வாறு உழைக்கமுடியுமென்பதற்குச் சான்றாக உள்ளன.

''உலகில் புதிய சமூக ஒழுங்கை, சமத்துவம், சகோதரத்துவம் சுதந்திரம், நீதி ஆகியவற்றினடிப்படையில் உருவாக்க சோவியத் யூனியன் அழைக்கிறது. சோவியத் அமைப்பு என்பது ஒரு வெறும் நிர்வாக அமைப்பல்ல, அது ஒரு வாழ்க்கை முறையாகும் அது சர்வதேச சமாதானத்தின் கட்டுக்கோப்புக்குள் தேசியமுன்னேற்றத்துக்காக உழைக்கிறது. சோவியத்மக்களது அர்ப்பணம்



சிரத்தை, திடஉறுதி ஆகியவற்றினால்தான் இத்தகைய சாதனைகளை அதனால் சாதிக்கமுடிந்தது.

''அம்மக்களது கடும்உழைப்பும் நாட்டின் தேசிய, மனித வளங்களை செயலூக்கமாகப் பயன்படுத்தியமையும் தேசத்தின் முன்னேற்றத்தில் ஒவ்வொரு பிரஜையும் பங்கெடுத்தமையும் நாட்டை முன்னேற்றச் செய்ததுடன்நிற்கவில்லை. சர்வதேச அரங்கில் சோவியத் யூனியனின் குரலுக்கு சக்தியையும் புகழையும் கூடக் கொடுத்துள்ளன'- என்றார்.

## இந்திய பாராளுமன்றத்தில் சோவியத் ஜனாதிபதி

புதுடில்லி

சோவியத் ஜனாதிபதி திரு. லியோனிஸ்ட் பிரஷ்னேவ் இந்தியப் பாராளுமன்றத்தில் நேற்றுஉரையாற்றினார். (வெ)

## ரஷ்ய தொலைக்காட்சியில் இராமாயணம்

மாஸ்கோ, டிச. 10

ரஷ்யத் தொலைக்காட்சியில் இராமாயணநிகழ்ச்சியொன்று ஒலிபரப்பப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (வெ)

## இந்தியா - ஜப்பான் பொருளாதார உறவு

புதுடில்லி, டிச. 10

இந்தியாவும் ஜப்பானும் தமது பொருளாதார உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளத் தீர்மானித்துள்ளன.

எரிபொருள், சுரங்கம், மின்சாரம், இரசாயன உரங்கள் ஆகிய துறைகளில் இரு நாடுகளும் பரஸ்பரம் ஒத்துழைப்பது குறித்து ஆராய்வதற்காக ஜப்பானிய வர்த்தகக் குழுவொன்று இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளது. (வெ)

## குற்றவியல் சட்ட திருத்த மசோதா

புதுடில்லி, டிச. 10

குற்றவியல் சட்டதிருத்த மசோதாவை இந்திய லோகசபை அங்கீகரித்தது.

குற்றமிழைப்போரைப் பயனுள்ள முறையில் தண்டிப்பதற்கு இம்மசோதா வகைசெய்கின்றது. இவ்வருடம்செப்டம்பர் மாதம் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்திற்கு பதிலாகவே இம்மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

இம்மசோதா கொண்டுவரப்படுவதை எதிர்க்கட்சியினர் வன்மையாக எதிர்த்தனர். (வெ)

## மாத்தளை

## ஸ்ரீமுத்துமாரி அம்பாள் வருடாந்த மகோற்சவம்

(மாத்தளை)

மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் அடுத்த மாதம் 31-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

பெப்ரவரி மாதம் 18-ந் திகதி மாசிமக பஞ்ச ரதோற்சவமும், 20-ம் திகதி மகா தீர்த்தோற்சவமும், 21 ம் திகதி பூங்காவனமும் நடைபெறும்.

கொடியேற்றத்தின் மறுநாட்தொடக்கம் பஞ்ச இரதோற்சவத்தின் முதல்நாள் வரைகதாப்பிரசங்கங்கள் நடைபெறும். இவ்வாலயத்தில் தற்பொழுது கல்யாணமண்டபம், புதியதேர்முட்டி, யாத்திரிகர் விடுதி ஆகியன நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

(புலோலி- திரு.)

## இந்து இளைஞர் பேரவை கூட்டம்

(உடுப்பிட்டி)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆட்சிக் குழுக் கூட்டம் இம்மாதம் 13ம் திகதி சனிக்கிழமை மாலை திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை செயலாளர் திரு. இ. சுவாமிநாதன் மேற்கொண்டுள்ளார். (வெ)

## ''வேதத்திற்கு வியாக்கியானம் கூறும் உரிமை திருச்சபைக்கே உண்டு!''

(அரியாலை)

வேதாகமத்திலிருந்து ''தமக்குத் தெரிந்த சிலவார்த்தைகளை எடுத்து அவற்றிற்குத் தமக்குத் தெரிந்தமாதிரிப் பிழையான வியாக்கியானங்களைக்கொண்டு அநேக பிரசங்கம் செய்துவருகிறார்கள் சிறந்த பிரசங்கிகள் என்று தம்மைத் தாமே கருதிக்கொள்ளும் இவர்கள் தமது பிரசங்கங்களைக் கேட்போர் மத்தியில் தமது கொள்கைகளைத் திணிப்பதற்காக வேதாகமத்தில்கூறப்படும் அடிப்படைத் தத்துவங்களுக்கு மாறாகவே வேத வியாக்கியானங்கள் செய்கிறார்கள். இவர்கள்பற்றி நாம் மிகவும் எச்சரிக்கையாக [illegible] வேண்டும்''.

இவ்வாறு யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு. சாம். டி. ஹேவர்சிங்டன் அடிகளார் அட்வெந்துகால 2-ம் ஞாயிறு ஆராதனையில் அருளுரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

நல்லூர் பரி. யாக்கோபுஆலயத்தில் நடைபெற்ற அருட்வெந்துகால இரண்டாம் ஞாயிறு திருவிருந்து ஆராதனையில் அடிகளார் தொடர்ந்து பேசியதாவது:

''வேதத்திற்கு வியாக்கியானம் செய்யும் அதிகாரமும் உரிமையும் திருச்சபைகளுக்கே உண்டு. திருச்சபைகளில் இன்று பல புதிய முறைகளில் வணக்க முறைகளை மேற்கொண்டாலும் அவைகள் எல்லாம் ஆதித் திருச்சபையின அமைப்பை அடிப்படையாக வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன, அங்கிலிக்கன்ஆதித் திருச்சபையின் அடிப்படைக் கொள்கைகளை முன்வைத்தே செயல்பட்டுவருகிறது. அட்வெந்துகாலம் கிறிஸ்தவர்களுக்குப் புனிதமான காலமாக அமைகிறது. இக்காலம் எமக்கு இறைவனின் வருகையைஉணர்த்துவதுடன் எம்மிடம் மேலதிகமாக உள்ளவற்றைப் பிறருக்குப் பங்கீடு செய்துகொடுக்கும் [illegible] கொள்கையையும் எமக்கு வலியுறுத்துகிறது. இந்தக்கொள்கையாய கிறிஸ்துவின் வருகையின் காலமாகிய புனித கிறிஸ்மஸ் காலம் எமக்கு ஆணித்தரமாகஉணர்த்துகிறது. கிறிஸ்மஸ் காலத்தைப் புனிதமாகக் கொண்டாட முயற்சிசெய்யும் நாம் இக்காலத்தில் பிறருக்கு உதவுவதுடன் நாம் செலவிடும் பணத்தில் ஒருபகுதியை ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்கு வழங்க முன்வரவேண்டும். இதனையே எமக்கு அட்வெந்து வருகையின் காலம் உணர்த்துகிறது. நாம் செலவிடும் பணத்தில் ஒருபகுதியில் எமது பிள்ளைகளுக்குவேதாகமப் புத்தகங்களை வாங்கி கிறிஸ்மஸ் அன்பளிப்பாக, அன்புப் பரிசாக வழங்கவேண்டும்'' என்றுகுறிப்பிட்டார்.

## கமிட்டித் தலைவர்

சென்னை, டிச. 10

சோவியத் ஜனாதிபதி லியோனிஸ்ட் பிரெஷ்நேவின் இந்திய விஜயத்தையொட்டி அமைக்கப்பட்ட தமிழ்நாடு வரவேற்புக் கமிட்டியின் தலைவராக இந்தியக் கல்விமான்களில் ஒருவரும் தென்னிந்தியப் பிரபலஸ்தர்களில் ஒருவருமான திரு. சுந்தரவடிவேலு நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஈரான் - ஈராக் யுத்தம்

## ஈராக்கின் எண்ணை நிலையங்கள் மீது ஈரானிய விமானங்கள்தாக்குதல்!

லண்டன், டிச. 10

ஈரான்-ஈராக் யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுவருவதாகவும் இரு நாடுகளும் கடும்யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான்-ஈராக் யுத்தத்தில் ஈராக்கின் முல் அஸ்பக்கர், ஹெரால் [illegible] ஆகியவிடங்களிலுள்ள எண்ணை நிலையங்களை தனதுவிமானங்கள் தாக்கியதாக ஈரான் அறிவித்துள்ளது.

ஈராக் நகரமொன்றின் மீது ஈரானியத் துருப்புக்கள் மேற்கொண்ட முற்றுகையை ஈராக் முறியடித்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு சோவியத் ஜனாதிபதி பாராட்டு

புதுடில்லி, டிச 10

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை சோவியத் ஜனாதிபதி திரு பிரஷ்னேவ் பாராட்டினார்.

நெருக்கடியான சர்வதேசப் பிரச்னைகள் [illegible] திசையைப்போக்கு [illegible] இந்திராகாந்தியுடன் ஒழுங்காகவும் [illegible] அனுகும் விதம் குறித்து [illegible] பிரஷ்னேவ் இந்தியப் பிரதமர் [illegible] சோவியத் ஜனாதிபதி [illegible]. (வெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இவ்வுலகம் ஒரு சத்திரம், தர்மசாலை. இது உனது சொந்தஸ்தானமல்ல. உனது பூர்வீக இருப்பிடம் பரம்தாமம். எனவே அதை நோக்கிச்செல்.
— சுவாமி சிவானந்தர்.

## நமது நோக்கு

### கலவானை!?

**1977-ம்** ஆண்டுப் பொதுத்தேர்தலில் கலவானை எம். பியாகத் தெரிவாகி, பின்னர் லீவு எடுக்காமல் மூன்று மாதங்கள் பாராளுமன்றம் செல்லாத காரணத்தால் பதவிஇழந்து பின்னர் புதிய அரசமைப்புப் படி ஐக்கியதேசியக் கட்சியினால் கலவானை எம். பியாக நியமிக்கப்பட்ட திரு. ஏ. பிலப்பிட்டியா தமது நிலைமையைத் தெளிவுபடுத்தி சபாநாயகருக்குக் கடிதம் எழுதியதைத் தொடர்ந்து சபாநாயகரின் அனுமதியுடன் தொடர்ந்தும் கலவானை எம் பியாக இருக்கின்றார்.

இதேசமயம் கலவானைத் தொகுதித் தேர்தல் ஆட்சேப வழக்கில் அந்தத் தேர்தல் செல்லுபடியாகாது என்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கு ஜனாதிபதி கசெட் மூலம் அறிவித்த தேதியில் நேற்று இரத்தினபுரிக் கச்சேரியில் கலவானைத் தொகுதியில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்கள் தாக்கல் செய்த நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

கலவானைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்களிப்பு அடுத்த மாதம் பன்னிரண்டாம்தேதி நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"1977-ம் ஆண்டு ஜூலையில் கலவானைத் தொகுதிக்கு நடந்த தேர்தல் செல்லுபடியாகாது அந்தத் தொகுதிக்கு ஜூலை 1977ல் முறையான தேர்தல் நடைபெறவில்லை என்ற தேர்தல் நீதிபதியின் தீர்ப்பை 8-10-1979 அன்று உயர்நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்தது. ஆனால் பிரஸ்தாப தொகுதிக்கான 17-1 1979-ம் தேதிய எனது நியமனம் செல்லுபடியாகாதென்றோ அல்லது ஏதேனும் ஊழல் நடவடிக்கையில் நன் தனிப்பட்ட முறையில் சம்பந்தப்பட்டிருந்தேன் என்றோ மேற்படி தீர்ப்பில் கூறப்படவில்லை. ஆகலால் நான் பதவி இழந்தவன் என்றோ அல்லது கலவானைத்தொகுதி காலியாகி விட்டதென்றோ கூறுவது தவறு. நான் இப்போதும் கலவானைத் தொகுதி எம். பியாகவே இருக்கிறேன்".

சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில் திரு. பிலப்பிட்டியா இப்படிக் கூறியிருந்தார்.

திரு. பிலப்பிட்டியாவின் கடிதத்தைச் சபையில்குறிப்பிட்ட சபாநாயகர் "18-1-1979ம் தேதி முதல் இச்சபையின் அங்கத்தவராக நியமனம்மூலம் பதவிவகித்து வருகிறார் என்று பிலப்பிட்டியா தெரிவிக்கின்றார். அவர் இந்தச் சபையில் நியமிக்கப்பட்டுப் பிரகடனப்படுத்தப்பட்ட ஓர் உறுப்பினராக இருக்கிறார் என்று நான் தீர்ப்பு வழங்குகிறேன்" என்று சபாநாயகர் அறிவித்திருக்கிறார்.

இவைகளைப் பார்த்துப் பொதுமக்கள் குழப்பமடைவது வியப்பல்ல!

அரசியலமைப்பு, நீதிமன்றம், பாராளுமன்றம், ஜனநாயகம் என்பதெல்லாம் என்ன? பொதுமக்கள் புரியாமல் திகைக்கின்றனர் விழிக்கிறார்கள்.

# விநாயக வழிபாட்டின் தோற்றமும் சான்றுகளும்

(இன்று விநாயகர் ஷஷ்டி விரதத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது. இருபத்தொரு தினங்களாக நடைபெற்று வந்த பெருங்கதைப் படிப்பு பூர்த்தி பெறுகிறது.)

ஞானத்தின் தலைவராகிய விநாயகரை நான் வணங்குகிறேன். எல்லா இடையூறுகளையும் தடைகளையும் நீக்கி நமது விருப்பங்கள் யாவற்றையும்பூர்த்திசெய்பவர் அவரே."

இந்துக்களுக்குரிய தெய்வங்களிலே விநாயகரைப்போல பிரபல்யமடைந்தவர் ஒருவரும் இல்லை. ஐந்தாம் நூற்றாண்டில் தான் இந்தவழிபாடு தமிழர்களிடையே ஆரம்பித்தது என்றாலும் விநாயகருக்கு ஆலயம் இல்லாத நகரமோ கிராமமோ தமிழ்நாட்டில் கிடையாது எனலாம்.

**ஆங்கிலம்: என். இராமகிருஷ்ணன்**
**தமிழில் : வ. குகசர்மா**

விநாயகரைக் குறிக்கும் நாமம் ரிக்வேதத்தில் காணப்படாவிட்டாலும் யானை முகமுடைய கடவுளைப் பற்றிய குறிப்புகள் அதனைச் சேர்ந்த தைத்திரிஆரணியத்தில் காணப்படுகிறது குஸ்கான அரசரின் பண்டைய நாணயங்களில் விநாயகரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அங்கு காணப்படும் உருவம் சிவபெருமானே இதனால் சிவபெருமானும் விநாயகரும் ஒருவரே என்னும்முடிவு உறுதிப்படுகிறது. புத்த சமயக் கோவில்களில்விநாயகரின் விக்கிரகம் காணப்படுகிறது. இலங்கையில் மிகுந்தலை என்னும் இடத்திலும் புத்தசமய உருவங்களுடன் விநாயகரின் உருவமும் காணப்படுகிறது.

புராதன ஆராய்ச்சிக் குறிப்புகள் விநாயக வழிபாடு குப்தர் காலம் தொடங்கி வளர்ச்சியடைந்தது எனக் கூறுகின்றன. ஆரம்ப விநாயக உருவங்கள் களிமண்ணினால் ஆக்கப்பட்டுள்ளன.

வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்கு விநாயக வழிபாடு ஐந்தாம் ஆறும் நூற்றாண்டில் தான் பரவத்தொடங்கியது. விநாயகர் ஆரம்பத்தில் தனித்தெய்வமாக வணங்கப்படவில்லை: வடாமிக் குகைகளில் காணப்படும் விநாயகரின் உருவம் குள்ளமாக உள்ளது. அத்துடன் நடனம் செய்கின்ற பாங்கிலும் நடராஜ சிலையின் பக்கத்தில் காணப்படுகிறார். சளுக்கிய காலத்தில் அமைக்கப்பெற்ற பாறைகளில் உள்ள விநாயகர் வீரபத்திரக் கடவுளுடன் காணப்படுகிறார். சில இடங்களில் சப்தமாதர்களுடனும், நவக்கிரகங்களுடனும் காணப்படுகிறார். ஒரிசாமாகாணத்தில் கோவில் வாசல்களிலும் மேல்வளைவுகளிலும் நவக்கிரகங்களுடனும் காணப்படுகிறார். சளுக்கிய உருவங்களில் விநாயகரின் துதிக்கை வலப்பக்கமாகத் திருப்பப் பெற்றுள்ளன.

தமிழ்நாட்டில் சளுக்கியர் காலத்தில் விநாயக வழிபாடு பெருகியது. முந்திய பல்லவ காலத்தில் விநாயகஉருவங்கள் அமைக்கப்பட்டதாகத்தெரியவில்லை என்றாலும் 5-ம்நூற்றாண்டிற்கும் 10 ம் நூற்றாண்டிற்கும் இடையில் அரசர்கள் விநாயகரின் சிற்பங்களை திருச்சிக் குகைகளிலும், வல்லம், குடுமிமலை ஆகியஇடங்களிலும் அமைத்துள்ளார்கள். அதற்குப் பிந்திய காலங்களில் விநாயகரின் உருவங்கள் சிவாலயங்களின் மாடங்களில் வைக்கப்பட்டுள்ளன, காலக்கிரமத்தில் விநாயகர் பரிவார தேவதையாக கணிக்கப்பட்டு ஆலயத்தினுள்ளே பிறிதான சிறு கோயில்கள் அமைக்கப்பெற்றன.

பிரகதீஸ்வரர் ஆலயத்தை அமைத்த ராஜராஜ சோழன் எத்தனையோ விநாயகர் உருவங்களை அமைப்பித்தான் எனச் சொல்லப்படுகிறது. இரு உருவங்கள் நின்ற நிலையிலும் இரு உருவங்கள் நடன நிலையிலும், மூன்று உருவங்கள் இருந்த நிலையிலும் உள்ளன. முட்கல புராணத்தில் 32 உருவங்கள் கூறப்பட்டுள்ளன. ஒரு மரத்தின்கீழ் அவர் கற்பநிருத்தம்செய்வதாகவும் அப்புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

டெக்கானில் உள்ள ஆலயங்களின் வாசல்களில் மிகச் சிறிய விநாயகரின் உருவங்கள் காணப்படுகின்றன. மிகப் பெரிய உருவம் வங்காளத்தைச் சேர்ந்ததிரிபுரா என்னும் பகுதியில் உள்ள மலை ஒன்றில் காணப்படுகிறது. அதன் உயரம் 3[illegible] நான்கு கைகளுடன் காணப்படுகிறது அந்த உருவத்தின் பக்கங்களில் யானைத் தலையும் நான்கு தந்தங்களும் பல கைகளுடன் கூடியதாகிய இரு உருவங்கள் காணப்படுகின்றன. சக்கரம், மணி, பேரிகை போன்ற பொருட்கள் அக்கைகள் ஏந்தி நிற்கின்றன.

தமிழில் உள்ள சிற்பசிந்தாமணி விநாயகரை ஆறு வெவ்வேறு வடிவங்களில் வழிபடலாம் எனக் கூறுகிறது. கல்லும் உலோகமும் இவற்றிற்கு உபயோகிக்கப்படலாம்.

பெரும் ஆலய அமைப்பாளர்களாகிய சோழர்கள் விநாயகருக்குத் தனி ஆலயங்களை அமைத்து வெங்கலத்தாலும் கல்லாலும் விக்கிரகங்களை அமைத்தார்கள், நகைகளுடன் கூடியதாகச் செதுக்கப்பட்ட இந்த உருவங்கள் சிற்ப சாஸ்திரன் மேன்மையை. விளக்குகின்றது நாகபட்டினத்தில் உள்ள பஞ்சமுக விநாயகர் பிள்ளையார் பட்டியல் உள்ள பிள்ளையாரின் சில உருவங்கள் இதற்குத் தக்க உதாரணங்கள் ஆகும்.

விநாயகரின் அழகிய உருவங்கள் ஆவுடையார் கோவில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில், சுசீந்திரம் கோவில் சற்றுணங்கள் மயூரம் முதலிய இடங்களிற் காணப்படுகின்றன. சுசீந்திரத்தில் விநாயகர் பெண் உருவத்திலும் புலி

(5ம் பக்கம் பார்க்க)

## சந்ததம் பணிந்தேன்

நாதத்தின் திருவுருவே
வேதத்தின் விழுப்பொருளே
போதத்தின் பேருருவ
விநாயகனே
திருவிழியால் எனையொருகால்
திருநோக்குச் செய்யுமையா
அருங்கலைகள் யாவுமெனைச்
சாருதற்கு அருளுமையா

முக்கண்ணன் முதல்மகனே
கணபதியே கஜமுகனே
விக்கினங்கள் வாராது
காத்திடுவாய்
சர்க்கரையின் சுவைமிளிரும்
செந்தமிழ்ப்பா மலர்கொண்டு
சந்ததமும் நானுனது தாழ்பணிவேன்

— முருகு

## பத்திரிகைத்துறையில் கால்நூற்றாண்டு: தமிழ்ப் பத்திரிகையாசிரியர்களுக்குபாராட்டு

### 'தகவம்' நடத்தும் இலக்கியப் பெருவிழா

(கொழும்பு)

தமிழ்க் கதைஞர் வட்டம் [தகவம்] தனது ஆறாண்டு நிறைவைத் தகுந்த முறையில கொண்டாடும் முகமாக எதிர் வரும் 20 ஆம், 21 ஆம் தினங்களில் பிற்பகல் 4-30 மணிக்கு கொழும்பு, விவேகானந்தசபைச் சிறிய மண்டபத்தில் தரமான 'இலக்கியப் பெருவிழா' எடுக்கிறது.

இவ்விழாவில், த. சண்முகசுந்தரத்தின் 'மருதப்பாவலவிகப்பற் பாட்டு' நூல் வெளியீடும், புலவர் ம. பார்வதிநாதசிவத்தின் 'இரு வேறு உலகம்' நூல் விமர்சனமும், கலா நிதி க. செ. நடராசாவின் 'வையாபாடல்' நூல் அறிமுகமும், 'ஆனந்த விகடன்' மணிமலர் இலக்கியப் போட்டியில் முதற் பரிசைப்பெற்ற திருமலையைச் சேர்ந்த புகழ் பூத்த எழுத்தாளர் திரு. அருள் சுப்பிரமணியத்திற்குப் பாராட்டும், பத்திரிகைத் துறையில் இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்த தமிழ்ப் பத்திரிகாசிரியர்களான திருவாளர்கள் எஸ். எம். கோபாலரத்தினம் [ஈழநாடு] ஆர். சிவகுருநாதன் [தினகரன்], எஸ். டி சிவநாயகம் [தினபதி], டேவிற்ராஜு [வீரகேசரி] ஆகியோருக்குப் பாராட்டும், 1980 ஆம் ஆண்டு முதல் இரு காலாண்டுக்காலத்திற்கான தகவப் பரிசைப் பெற்ற சிறுகதை எழுத்தாளர்களான திருவாளர்கள் எம். எல். எம். மன்சூர் [சிறுகதை: 'முச்சாரிகள்' மீட்டும் முகாரி ராகங்கள்', சுதாராஜ் [சிறுகதை: 'கொடுத்தல்', தெணியான் [சிறுகதை: 'பாவம் வாத்தியார்', கே. ஆர் டேவிற் [சிறுகதை: 'சமுதாயச் சருக்கங்கள்', செ. யோகநாதன் [சிறுகதை: 'சின்ன மீன்' பெரிய மீன்', ஞானரதன் சிறுகதை: இரத்தஉரம்', ஆகியோருக்குப் பரிசளிப்பும் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம் பெறும்.

இலக்கிய ஆர்வலர்கள் தகவத்தோடு ஒன்று சேர்ந்து தமிழ்ப் பேனாமன்னர்களை வரவேற்று, வாழ்த்தி வணங்கிட வருகைதரல் வேண்டுமென விழா அமைப்பாளர் திரு. அமுதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மக்கள் கருத்து

### திருமலை நகரசபை கவனிக்குமா

இலங்கையில் முக்கிய நகரங்களில் ஒன்றானதும் உலகப் பிரசித்திபெற்ற இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டதும் திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் போன்ற ஞானிகளால் பாடப்பெற்ற திருக்கோணேசர் வீற்றிருக்கும் திருகோணமலை நகரம் கடந்த 25 வருடங்களாக எவ்வித அபிவிருத்தியுமின்றி விளங்குகின்றது.

தலைப்பட்டணம் என்ற முறையில் கொழும்புக்கு அடுத்ததாக சிறப்புப்பெயர் பெற்றது. திருகோணமலையே என்பதை, எவரும் மறுக்க முடியாது. அத்தகைய நகரம் தற்பொழுது வளர்ச்சியடைந்து வரும் ஏனைய சாதாரண நகரங்களுடன் கூட ஒப்பிட்டுப்பார்க்கமுடியாத அளவு பின்தங்கியுள்ளது. தற்போதைய நகராட்சி மன்ற நிர்வாகத்தினால் ஒரு சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் மக்களைத் திருப்தி[illegible] நகரின் முன்னேற்றம் இல்லை.

(2-ம் பக்கம் பார்க்க)

நாளை

### இராமநாதன் குருபூசை

(சுன்னாகம்)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில், சேர். பொன். இராமநாதனின் 50 வது குருபூசை விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

நாளை முற்பகல் சமாதி ஆலயத்தில் அபிஷேகமும் திருவிழாவும் பிற்பகல் மதியபோசனமும் தொடர்ந்து சைவமங்கையர் கழக மாணவர் சங்கக்கூட்டங்களும் நடைபெறவிருக்கின்றன.

பி. ப 3 மணிக்கு சேர். பொன். இராமநாதனின் சமயப்பணி, கல்விப்பணி, இலங்கையின் சுதந்திரத்துக்கு அவர் ஆற்றிய தொண்டு ஆகியன பற்றி செல்வி பத்மசோதி சண்முகநாதபிள்ளை, செல்வி ரோகிணி குமாரசுவாமி, செல்வி அநுசயவனிதா முருகுப்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். (ஈ)

### ஆராதனை, திருப்பலி

(யாழ்ப்பாணம்)

சாட்டி புனித சித்தாத்திரை அன்னையாரின் தேவாலயத்தில் திருச்செபமாலை ஆராதனையும், திருப்பலியும் நாளை மறுதினம் சனிக்கிழமை பங்குத்தந்தை அருட்திரு ஞானப்பிரகாசம் அடிகளாரின் தலைமையில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'பா'ரதியைப்படைத்தளித்த பாரதியின் மனோநிலை ஆய்வு

பாரதியைப் பாமரத்தமிழன்பர் காமுற்றுக் களிப்புறவே படைத்தளித்த தமிழ்ப்பிரமன் பாரதியின 98வது பிறந்த நாள் இன்று ரதிபோன்ற பெண்கள் என்றும் செல்வர்தர் 'பஞ்சணைச்சொத்தா'த்திகழ்வது வழமை. அதுபோன்றே பாரதியாம் தமிழ்க் கவிதை மாளும் அரச பரம்பரைக்கும் மேன்மாட மக்களுக்கும் பண்டிதர்க்கும் மட்டுமே உரியவள் என்பது அந்நாள் வழமை அந்த ஏழமையைப் பழமையாக்கி பாமரத்தமிழ் அன்பர்களும் தமிழ்க்கவிதை மகளை எட்டி அணைத்து களிப்புறச் செய்த பெருமை பாரதியினுடையது!

காலத்தின் தேவைக்கேற்ப இலக்கியங்கள் மாறுதல் அடையும்போது அந்த மாறுநிலைப் பருவத்தில் மகாகவிகள் தோன்றி வழிகாட்டுவது இலக்கிய மரபு. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மக்களுக்கும் தமிழ் இலக்கியத்துக்குமிடையே அகல நீளமான இடைவெளி ஏற்பட்ட காலகட்டத்தில் தமிழ் இலக்கியத்தை மக்கள் மயப்படுத்திய மகாகவியாக பாரதிதோன்றினன். இலக்கிய ஊர்தியை மக்கள் பயராக மாக ஓட்டிய சாரதி நம்பாரதி. இதனை இராகவன் அவர்கள் தனது கவிஞனின் குரல் எனும் ஆங்கிலப் பதிப்பில் ''அவரே இன்றைய தமிழ் இலக்கியத்தின் தந்தை. அவர் தமிழை ஜமீன் தார்களிடமிருந்தும் மடாலயங்களிலிருந்தும் மீட்டு தேசிய வாழ்வு எனும் பெரும் ஓட்டத்துள் கொண்டு வந்தார்'' எனும் சொற்களால் தெளிவாக விளக்குகிறார்.

இயல்புடன் எழும் இலக்கியங்கள் பாரதியின் படைப்புக்களோ பி. என். அப்புசுவாமி கூறுவதுபோல் ''பாரம்பரியத்தில வேரூன்றி பழமையாக இருந்துவந்த சிக்கலற்ற எளிய வடிவங்களைப் பயன்படுத்தி புதியநோக்கங்களையும் புதிய முயற்சிகளையும் அணுகும்,' முறையில் அமைந்துள்ளன. ''பூர்விக மஹான்களின் ஞாபகத்தை தீவிரமாகப்பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மஹான்கள் பிறக்கவழியில்லை. தப்பித்தவறி ஓரிருவர் தோன்

**- பற்றிமாகரன் -**

றினாலும் அவர்களுக்கு தக்க மதிப்பு இராது. பண்டைக் காலத்துச் சக்திமான்களை வியப்பதும் அவர்களுடைய தொழிற்பெருமையை உலகறிய முழக்குவதும் கூடியவரை பின்பற்ற முயல்வதுமாகிய பழக்கமே இல்லாத ஜனங்கள் புதிய சக்திமான்களை என்ன வகையிலே கணிப்பார்கள்'' எனும் பாரதியின் எழுத்து பழமைபேணி புதுமையை நோக்கி விரையும் அவரின் மனக்கருத்தின் குவிப்பு என்றே கூறவேண்டும். அதே வேளை ''தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள்உப்பு நீரைக் குடிக்கிறார்கள்'' என எழுதி புதுமையின் தேவையையும் பாரதி தெட்டத்தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறான். இவ்வாறாக இலக்கியப் புரட்சிக்கு மனத்துணிவும் மறப்புலவன் அவ் இலக்கியப் புரட்சியை மக்கள் மயப்படுத்தலுடன் இணைக்க விரும்பினான். ''எளிய

''காதலினாலுயிர்தோன்றும்-
இங்கு
காதலினாலுயிர் வீரத்திலேறும்
காதலினாலறிவெய்தும் -
இங்கு
காதல் கவிதைப் பயிரை
வளர்க்கும்''

எனும் பாரதியின் பாடல் வரிகள் காதல் எனும் துடுப்புக் கொண்டு வாழ்க்கைப் படகை சமூக நீரோட்டத்துள் வெற்றி ஓட்டம் ஓடவைக்கும் கலைவுடைப் படைப்புகள். உயிருக்கு உருவமில்லை. ஆனால் காதலினால் உயிருக்கு உருவம் கொடுக்க முடியும். உண்மைக் காதலர்களில் ஒருவரின் உருவம் மற்றவருக்கு உயிர். எனவே காதலினால் உயிர் தோன்றிவிட்டது கண்ணுக்குப் புலப்பட்டுவிட்டது. அதேவேளை இருவரும் ஒருவரின் உயர்வை புகழைப் பெரிதாகப் போற்றுவர் ஆகவே உயர்வுறப் புகழ்பெற அரியன செய்யக் கர்த்தா அழைப்பு விடுக்கும் இது வீரத்தைத் தோற்றுவிக்கும். காதல் வளர்ந்து அன்பின் உணர்வை இதயம் பெற்றதன் பின் அவர்கள் ஒருவரை ஒருவர் மட்டும் அன்பு செய்வதோடு நின்று விடாது. அன்பு வாழ்வை ஆரம்பிப்பர். அதனால் கோபதாபங்களுக்கு அவசர செயல்களுக்கு இடங்கொடாது நிதான சிந்தனையோடு செயற்படுவர். இதனால் அறிவு பெருகும். அறிவின் செயலாக யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என ஒழுகுவர்.

# அறிவியல் பூஞ்சோலை

சிந்தனைச் சித்தைதான் கவிதை. சித்தையிலே வார்த்து வைத்த திராட்சைக் கள்ளுக்கு உடற்கிளர்ச்சி ஊட்டுகின்ற சக்தி இருப்பது போல் சிந்தனைச் சிதையிலே வார்க்கின்ற கவிதைக்கும் உளக்கிளர்ச்சி ஊட்டுகின்ற சக்தி இருக்கவே இருக்கிறது அந்தக் கவிதா சக்தியைக்கொண்டு சகத்தினையே மாற்றி அமைத்து சரித்திரம் படைத்திடப் புறப்பட்டவன் நம்புலவன். ''பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்'' என்பது அவனது இதய அவா.

''சேம மணிப் பூந்தட
நாட்டில்
சிறிய புழுக்கள் தோன்றி
வெறுங்
காமநுகர்தல் இரந்துண்டல்
கடையாம் வாழ்க்கை
வாழ்ந்து பினர்
ஈமம் புகுதலிவை புரிவோர்
என்னே கொடுமை
யீதிதுவே''

என்று ''தியநாச உறக்கில் வீழ்ந்தநீர் மறந்நீக்கி'' எழுந்திடக் கவிதைபாடுவேன் எனப் புறப்பட்ட பெரும் தலைவன் நம்பாரதி ''தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வுதர வேண்டுமென்று சங்கணம்கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இந்தொழிலில் தூண்டினாள்'' எனும் பாரதியின் எழுத்துக்கள் அவன் மனோநிலையின் அச்சுக் குறிகள்.

எந்த காலகட்டத்தில் உற்பத்தியான இலக்கியங்களை எடுப்பினும் அவை இரண்டு முரண்பட்ட நுட்பங்களுள் அடங்கும் ஒன்று பிரபல்யமடைந்த பாரம்பரியத்தையும் வழக்காறுகளையும்அடியொற்றி எழும் இலக்கியங்கள். மற்றவை பழமைக்கு முற்றிலும் புரட்சியாக பாரம்பரியங்களையும் வழக்காறுகளையும் நிராகரித்துவிட்டு முற்றிலும் தன்னி

பதங்கள்-எளிய நடை-எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம் பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்துதருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாக இருக்கின்றான்'' என்பது அவனது ஆணித்தரமான தீர்ப்பு. இதனை டி. பி. மீனாட்சி சுந்தரன் அவர்கள் ''நாட்டுப் பாடல்களும் நாடகங்களும் மெதுவாக முக்கியத்துவம் பெறத் தொடங்கின. பாரதி இவற்றை தனதுதேசிய உணர்வையும் புரட்சிக்கருத்துக்களையும் சுமக்கத்தகுதி வாய்ந்தவாகனங்களாக்கானின'' எனச் சுட்டிக்காட்டுகின்றார்.

சமுதாயப்புரட்சிக்கு நூலையே வேலாகக்கொண்டு புறப்பட்ட தமிழ்க்குமான் பாரதி சமுதாயப் புரட்சியினை குடும்பமெனும் அடித்தளத்திலிருந்தே கட்டி எழுப்பக் கங்கணம் கட்டிநின்றான். ''வீட்டிலுள்ள பழக்கமே நாட்டிலுண்டாம் வீட்டினிலேதனக்கடிமைபிறராம் என்பான், நாட்டினிலே நாடோறும் முயன்றிடுவான் நலிந்து சாவான்'' என எழுதும் பாரதி வீட்டைத் திருத்தி நாட்டைத் திருத்த தமிழேட்டைத் திருப்புகிறான்.

குடும்பம் என்று சொல்கையில் அங்கு முதல் உணர்வு ஆண்-பெண் ஒன்றிப்பே. ஒருவகையில் இவ் ஆண்-பெண் பாலியல் தொடர்பே மனித சக்தியின் நிலைக்களன். இலக்கியம் என்பதன் கடமை தெளிவுபடுத்துவதேயாகும். மானுடரின் இயல்பூக்கமான பாலியலை நெறிப்படுத்தி அங்கிருந்து மானிட எழுச்சியைக் காணத் துடிப்பவர்கள் கவிஞர்கள். பாரதியும் இந்தப் பணியைத் தான் முதலில் செய்கிறான்.

ஆகவே கவிதைப் பயிரை காதல் வளர்க்கும் எனத் தெளிவாகக் காட்டும் கவிஞன்

''ஆவிக்கலப்பின் அமுத
சுகந்தனிலே
மேவியங்கு மூடியிருந்த
விழிநான்கு''

எனக் காதல் பெருஞ்சுவையைச் சுட்டிக்காட்டவும் மறக்கவில்லை இவ்வாறாக யதார்த்த ரீதியில் மனிடனின் அகவாழ்வின் அவசியத்தைக் காட்டும் பாரதி அதேவேளை தனிமனிதன் வாழ்வினிலே சமூகச் சங்கிலிகள் ஏற்படுத்தும் விலங்குகளையும் குறிப்பிடத் தவறவில்லை.

''நாடகத்தில் காவியத்தில்
காதலென்றால்
நாட்டினர் தாம்வியப்பெய்தி
நன்றாம் என்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே
கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால்
உறுமுகின்றார்
பாடைகட்டி அதைக்கொல்ல
வழி செய்கின்றார்
பாரினிலே காதலெனும்
பயிரை மாய்க்க
மூடரெல்லாம் பொறாமை-
யினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக்
கெடுகின்றாரே''

என எமது மக்களின் மனோநிலையை படம்பிடித்துக் காட்டும் பாரதி ''காதலினால் சாகாமலிருத்தல் கூடும் கவலைபோம் அதனாலே மரணம் பொய்யாம்'' எனத்தான் பாடியதைப் பாவி மனிதர்கள் கெடுக்கின்றார்களே என்ற [illegible]

(தொடரும்)

## சார்ஜன்ட், கான்ஸ்டபிள் வழக்குடிச. 16-ல் விசாரணை

(மாவிட்டபுரம்)

சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய சார்ஜண்ட் ஒருவர் மீதும் கான்ஸ்டபிள் ஒருவர் மீதும் தொடரப்பட்ட தாக்குதல் வழக்கு இம்மாதம் 16ந் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது

சங்கானையைச் சேர்ந்த சபாரத்தினம் ராசேந்திரன் என்னும் நபரைப் பொல்லால் தாக்கிப் படுகாயம் விளைவித்ததாக இவ்வழக்கில் சங்கானைப் பொலிஸ் நிலைய சார்ஜண்ட் கிருஷ்ணன் குலசிங்கம், கான்ஸ்டபிள் விஜயசுந்தர ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி இருபொலிஸ் உத்தியோகத்தர்களும் இச்சம்பவத்தையடுத்து தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள்மீதான வழக்கைச் சங்கானைப் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் திரு. பிரேமதாசா மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததையடுத்து மேற்படி இருபொலிஸ் உத்தியோகத்தர்களும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பதால் இவ்வழக்கின் விசாரணையை தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும் என்று எதிரிகள் தரப்பு சட்டத்தரணிகள் கோரியதையடுத்து இம்மாதம் 16ந் திகதிக்கு விசாரணையை ஆரம்பிப்பதாக மல்லாகம் நீதிபதி திரு சி. ஆர். இராஜசிங்கம் தெரிவித்தார்.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே செல்வரத்தினம், ரி. சூரியகுமார், எம் ஸ்ரீதரன், எம் திருநாவுக்கரசு, திருமதி எம் பீரிஸ் ஆகியோரும் 2ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் சு நடராசா ரி தம்பிரத்தினம், எஸ். ஸ்ரீதரன் ஆகியோர் ஆஜரானனர். இவ்வழக்கில் சாங்கே சன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஹாஷன் விஜயக்கோன், சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டராசவிருந்த திரு. டெர்ஹண்டோ: யாழ் சட்ட வைத்திய அதிகாரி திரு. சரவணபவானந்தன் உட்படஎட்டு சாட்சிகள் சாட்சியமளிக்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஈ)

## 'செக்' மோசடி: எதிரிக்கு கடூழியச் சிறைத்தண்டனை

(மட்டக்களப்பு)

சாத்தான்குடிவாசி ஒருவர் தன்னைக் காத்தான்குடி ப. நோ. கூ. சங்கப் பிரதிநிதியெனச் சொல்லியாழ்ப்பாணம் மில்க்வைற் தொழிற்சாலையில் சவர்க்காரமும் ரொக்கமும் வாங்கி நம்பிக்கை மோசடி செய்தவழக்கில் கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

காத்தான்குடிவாசியான பஜீத் என்பவர் 7350 ரூபாவுக்கு சவர்க்காரம் வாங்கி அத்தொகைக்குச் காசோலை ஒன்றை வழங்கிச்சென்றதாகவும் பின்னர் திரும்பி வந்து லொறி பழுதாகிவிட்டதால் அதைத் திருத்தப்பணம் தேவையெனக்கூறி ரொக்கமாக 1200 ரூபாவைப்பெற்றுச் சென்றதாகவும் அவர் கொடுத்த காசோலைகள்ளக்காசோலை என்பது தெரிய வந்ததாவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது,

விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் [illegible] யாழ்ப்பாணம் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் அவர் 5 மாதகாலம் விளக்கமறியலில் இருந்ததை கவனத்திற்செலுத்தி 3 மாதகால கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார். யாழ். விசேட புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி திரு. ஜி. எஸ் பிள்ளையால் இவ்வழக்குதொடரப்பட்டிருந்தது'

## கடலட்டை ஏற்றுமதி சங்கம் கோரிக்கை

(பச்சிலைப்பள்ளி)

''கடலட்டையை ஏற்றுமதி செய்யும் தனியார் வியாபாரிகளுக்கு இருக்கும் கட்டுப்பாடற்ற நிலை, கடற்றொழிற் சங்கங்களுக்கும் இருக்கவேண்டும். இல்லையேல் கடலட்டை ஏற்றுமதி முற்றாகத் தடை செய்யப்படவேண்டும்''

இவ்வாறு யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர் சங்கம் கடற்றொழில் அமைச்சைக் கோருவதெனத் தீர்மானித்துள்ளது.

இரண்டரை அங்குல நீளத்திற்குக் குறைவான அளவுள்ள கடலட்டைகளை கடற்றொழிற் சங்கம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு கடற்றொழில் அமைச்சு தடைவிதித்துள்ளது ஆனால் கடலட்டையை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி பெற்ற தனியார் வியாபாரிகள் இந்த அளவுக்கு குறைவான அளவுள்ள கடலட்டையை கட்டுப்பாடற்ற முறையில் ஏற்றுமதி செய்து வருகிறார்கள்.

கடற்றொழிற் சங்கத்திற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டு தனியார்வியாபாரிகளைப் போல் கடலட்டையை ஏற்றுமதி செய்வதற்கு கடற்றொழில் அமைச்சு அனுமதி வழங்க வேண்டுமெனவும், இல்லையேல் கடலட்டை ஏற்றுமதியை முற்றாகத் தடைசெய்ய வேண்டுமெனவும் சங்கம் கோரவுள்ளது.

## மரம்நாட்டும் இயக்கம்

(பசசிலைப்பள்ளி)

பளைப் பகுதியில் மரம் நாட்டும் இயக்கத்தினை ஊக்குவிக்கும் முகமாக நாலாயிரம் தென்னம்பிள்ளைகளும், ஆயிரம் மரக்கன்றுகளும், இப்பகுதி கிராம சேவையாளர்களுக்கூடாகக் குறைந்த விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. இதற்கான நடவடிக்கையினை பளை உதவி அரசாங்க அதிபர் திரு. கு கிட்ணர் மேற்கொண்டிருந்தார்.

## விநாயக...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யினது பாதங்களுடனும் காணப்படுகிறார் விக்னேஸ்வர என அழைக்கப்படுகிறார். பவானி எனும் இடத்தில் அவர் வீணையுடன் காணப்படுகிறார். சில இடங்களில் உச்சிஷ்ட கணபதி என்னும் பெயருடன், மடியில் ஒரு பெண்ணுடனும் 12 கைகளுடனும் காணப்படுகிறார்.

இருவித விநாயக உருவங்களை நாம் காண்கிறோம் ஒன்று வலம்புரி விநாயகர் மற்றது இடம்புரி விநாயகர் தும்பிக்கை வலப்பக்கமாகத் திரும்பப் பெற்றிருப்பது வலம்புரி விநாயகர் இடப்பக்கமாகத் திரும்பப் பெற்றிருப்பது இடம்புரி விநாயகர் இவ்விரு உருவங்கள் அருமையாகவே காணப்பெறுகின்றன.

ஆவணியில் வரும் விநாயக சதுர்த்தியும் கார்த்திகை அல்லது மார்கழியில் வரும் விநாயகர் ஷஷ்டியும் இவருக்குரிய விசேட தினங்களாகும்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழக்கை வாபஸ்பெறவிரும்பிய பொலிஸார்; நீதிபதி மறுத்து விசாரணைக்கு உத்தரவிட்டார்!

(மாவிட்டபுரம்)

அசமடிக்குப்பங்கம் என்ற குற்றச்சாட்டின் மீது பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு ஒன்றை பின்னர் வாபஸ் பெற பொலிசார் முனைந்தபோது அதனை மறுத்த நீதிபதி வழக்கை விசாரணை செய்ய உத்தரவிட்டார்.

மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கு ஒன்றிலேயே இவ்வாறு உத்தரவிட்டார்.

காணித் தகராறு தொடர்பாக வளவையைச் சேர்ந்த சிலருக்கிடையே மூண்ட தகராறையடுத்து அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தியது தொடர்பான குற்றச்சாட்டின் மீது 13 பேர் மீது இவ்வழக்கை காங்கேசன்துறைப் பொலிசார் தொடர்ந்திருந்ததையடுத்து நீதிபதி திரு. கா. கணபதிப்பிள்ளை எதிரிகளது உரிமைக் கோரிக்கைகளை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இவ்வழக்கு மீண்டும் ஆரம்ப நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்டபோது பதில் நீதிபதியாக கடமையாற்றிய திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் முன்னிலையில் காங்கேசன்துறைப் பொலிஸ் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி திரு பீரிஸ் விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து இவ்வழக்கை வாபஸ் பெறுவதாகத் தெரிவித்தார்.

அவர் தமக்குத் தெரியாமல் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரால் தவறுதலாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விட்டதாகக் கூறி அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடிய நிலை இல்லையெனவும் தெரிவித்தார். இதனை பதில் நீதிபதி ஏற்கமறுத்து விசாரணையைதொடர்ந்து நடத்தினர்.

பிரச்னைக்குரிய காணியில் வீடும், கிணறும் அமைத்துள்ள எதிரிகளில் ஒருவரான கே. சிற்றம்பலம் என்பவரை அவ்வேலைகளை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டார். மேல் விசாரணை ஒத்திப்போடப்பட்டது.

## கிராம அபிவிருத்தி அதிகாரியாக நியமனம்

(புலோலி)

வடமராட்சி வலிகிழக்குப் பகுதி செம்பியன்பற்று வடக்கு கிராமஅபிவிருத்திச்சங்கத் தலைவரும், பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க உறுப்பினருமாகிய திரு. எல். ஏச். ஜே. சீவரத்தினம் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராமஅபிவிருத்தி அதிகாரியாக கிராம அபிவிருத்தி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

செம்பியன்பற்று றோமன்கத்தோலிக்கப்பாடசாலை, கண்டி அர்ச். சில்வெஸ்ரர் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் ரோமாபுரி வேதபோதக சர்வகலாசாலையினால் கண்டி தேசிய குருமடத்தில் நடாத்தப்படும் தத்துவசாஸ்திரப் பட்டப்பரீட்சையில் சிறப்பியல் பட்டம் பெற்றவர்.

செம்பியன்பற்று புனித பிலிப்புநேரியார் கோவில் மூப்பர் பிலிப் புலடிஸ்லாஸ் மாணிக்கம் தம்பதிகளின் புதல்வரான திரு. சீவரத்தினம் சிறந்த பேச்சாளரெனபதும் குறிப்பிடத்தக்கது.

## நல்லாசிரியரின் கடமை; அதிபர் தரும் விளக்கம்

(அரியாலை)

"மாணவர்களின் நலன்களை மனதில் கொண்டு கல்வி போதிக்கும் ஆசிரியர்களே சிறந்த ஆசிரியர்களாவர். இவர்களின் சேவை மூலமே கல்லூரிகளும் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர், மாணவிகளும் வளர்ச்சியடைவர். கற்பித்தலே தமது வேலைகள் என்று கருதும் ஆசிரியர்கள் பாடசாலைகளின் ஏனைய வேலைகளில் கவனம் செலுத்தவில்லை. மாணவர் மாணவிகளின் தன்மைக்கேற்ப தம்மைமாற்றி அவர்களின் அறிவு விருத்திக்கு ஏற்றவகையில் கல்வி போதிக்கும் ஆசிரியைகளே மாணவ மாணவிகளின் அபிமானத்தையும் அன்பையும் பெறும் ஆசிரியர்களாவர்".

இவ்வாறு நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியைகளுக்கான பிரியாவிடை வைபவத்தில் வித்தியாலய அதிபர் திரு. ப. கணபதிப்பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலயத்தில் ஆசிரியைகளாகப் பணிபுரிந்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு பயிற்சி பெறத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ஆசிரியைகளான திருமதி சாமுவேல், திருமதி தங்கராசா ஆகியோருக்கு அளிக்கப்பட்ட இப் பிரிவுபசார வைபவத்தில் அதிபர் தொடர்ந்து பேசியதாவது:

"ஆசிரிய, ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பின் மூலமே கல்லூரிகள் வளர்ச்சியடைய முடியும். இந்தவகையில் இக்கல்லூரிகளில் ஊழியம் செய்யும் ஆசிரியர்கள் வழங்கும் பூரண ஒத்துழைப்பின் மூலம் இக்கல்லூரி நன்கு வளர்ச்சியடைந்து வருகிறது. நாம் எக்கல்லூரியில் கல்வி கற்பித்தாலும் இது எமதுகல்லூரி என்ற மன உணர்வோடு செயல்படவேண்டும். கிறிஸ்தவ ஆசிரியர்களிடத்தில் சேவையுணர்வும் கடமையுணர்ச்சியும் அதிகமாக விருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது" என்று கூறினர்.

## புராணபடனம், பஜனை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சூராவத்தை முத்துமாரியம்மன் கோவிலில் திருவெம்பாவையை யொட்டி நாளைமறுதினம் திருவாதவூரடிகள் புராணபடனமும், அதிகாலை பஜனையும் நடைபெறும்.

## மின் நியோகம் செய்ய நடவடிக்கை

திருகோணமலை நகருக்கு அருகில் உள்ள அலஸ் தோட்டப்பகுதிக்கு மின்விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க இருப்பதாக, திருகோணமலை உதவி அரசாங்க அதிபர் திரு. வி. எம். கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை நகருக்கு அண்மையிலுள்ள பல பகுதிகளில் குடிசைக் கைத்தொழில் நிலையங்களை அமைக்கவும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை நாம் நாட்டினதும் மக்களினதும் பொருளாதாரம் சிறப்பாக அமையவும் இப்பகுதிகளில் மின்சார விநியோகம் அவசியமென்றும் அவர்மேலும் கூறினர்.

## இருதய நோய் பரிசோதனை யந்திரம்

(நெல்லியடி)

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு இருதய நோய் சம்பந்தமான பரிசோதனைகளுக்கான இயந்திரமொன்றை சுகாதாரத் திணைக்களம் வழங்கியுள்ளது.

தனியார் ஒருவரினால் முன்பு இவ்வைத்தியசாலைக்கு இப்படியான யந்திரமொன்று அன்பளிப்பு செய்யப்பட்டிருந்தது. அவ்யந்திரம் பழுதடைந்தும் இதுகாலவரை திருத்தப்படாதுள்ளது. (வெ)

## ஐம்பதாவது மறைவுதின விழா

(யாழ்ப்பாணம்)

தேசியத் தலைவர் சைவப் பெரியார் சேர். பொன். இராமநாதனின் ஐம்பதாவது மறைவுதின விழா நாளை வெள்ளிக்கிழமை காலை யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பரமேஸ்வரன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மு. கனகசபாதிக் குருக்களால் பரமேஸ்வரனுக்குச்சங்காபிஷேகம் நடாத்தப்படும். (வெ)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(உடுப்பிட்டி)

கட்டைவேலி-தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்னவுக் கூட்டுறவுச் சங்கத்தின்வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 28ம் திகதி கரணவாய் வடக்கு பொன்னம்பலம் வித்தியாசாலையில் நடைபெற உள்ளது.

இப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. செ. தங்கராசா தலைமையில் நடைபெறும்.

## சிங்கப்பூர்விஜயம்

(அரியாலை)

தென். இந்தியத் திருமண்டல சாவகச்சேரித் திருச்சபையின் குரு, அருள்திரு ஜே. ஜே. ரெத்தினராசா அடிகளார் திருமறைச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்காகச் சிங்கப்பூர் சென்றுள்ளார். அவர் அங்கு இரண்டு மாதங்கள் தங்கியிருப்பார்.

## மகாநாட்டுப் பிரதிநிதிகள்

(அரியாலை)

கொழும்பு சுகததாசா விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக, வடமாகாணத்தின் பதினொரு தொகுதிகளிலிருந்தும் தொகுதிக்குத் தலா எழுபது பிரதிநிதிகள் வீதம் யாழ். மாவட்ட அமைச்சர் திரு யு. பி. விஜயக்கோனால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வடபிரதேச பிரதிநிதிகளாகக் கலந்துகொள்வர்.

## ஆசியப் பிரதிநிதி

(அரியாலை)

யாழ்ப்பாணம் புனிதபேதுரு ஆலயக்குருவும், இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான திருமறைக் குழுவின் தலைகுருமான அருட்திரு. லெஸ்லி அரியராசா அடிகளார் உலகத்திருச்சபைச் சம்மேளகத்தின் ஆசியப்பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் மிகவும் சிறந்த கவிசேஷகராவார்.

## ஜவுளிவகைகள் கொள்வனவு

(உடுப்பிட்டி)

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு கட்டைவேலி-நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பெருமளவில் ஜவுளிவகைகளைக் கொள்வனவு செய்துள்ளது. (வெ)

## பாராட்டு

(உடுப்பிட்டி)

கரவெட்டி புனித பரலோகமாதா தேவாலயத்தில் பூசை, ஆராதனைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்ட இளைஞர் காங்கிரஸ் செயலாளரும், கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயப் பங்குச்சபை உறுப்பினருமான திரு. ஆர். க. ஆனந்தராசாவிற்கு கரவெட்டி கத்தோலிக்க மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

கடந்த மூன்று மாதகாலமாக இத்தேவாலயத்தில் பூசை ஆராதனைகள் தடைபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (வெ)

## இரு புதிய துறவிகள்

(மாத்தளை)

மாத்தளை புனித பிரான்சிஸ்கன் சபையில் பாஷையூரைச் சேர்ந்த ஞா. மரியநாதனுக்கும், உண்ணஸ்கிரியாவைச் சேர்ந்த ம. கிறேசியனுக்கும் கடந்த 7ம் திகதி காலை சந்நியாச உடை வழங்கப்பட்டது. இவர்கள் விண்ணப்பதாரர்களாக மக்கோன புனித

(2-ம் பக்கம் பார்க்க)

## கரவை வித்துவான் கந்தப்பு நடராசா

கல்வித்துறையிலும் தமிழ் இலக்கிய, இலக்கண, கலைத்துறையிலும் சிறந்து விளங்கிய கரவெட்டி வித்துவான் கந்தப்பு நடராசா அமரத்துவம் அடைந்தமை, அவரது பண்புகளான அடக்கம், வாய்மை, எழிமை, இறைபக்தி ஆகியவற்றை அறிந்தவர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த நெஞ்சுருக்கும் கவலையை அளிக்கத் தவறியிருக்க முடியாது.

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் பட்டத்தைப் பெற்ற திரு. நடராசா அடுத்து பீ. ஓ. எல். பட்டத்தையும் பின் எம். ஏ. பட்டத்தையும் பெற்றுத் தமிழ்மொழியிலும் இலக்கண, இலக்கியத்திலும் பாண்டித்தியம் பெற்று விளங்கினர். கரவெட்டியில் 'வித்துவான்' என்ருல் அது திரு நடராசாவையே குறிக்கும் என்ற அளவிற்கு அவர் நடமாடும் தமிழறிவின் உருவமாக விளங்கினர்.

பொதுச் சேவையில் உயிர்த்துடிப்போடு தீவிரமாகப் பங்குபற்றிய வித்துவான் கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்திற்கென ஒரு காணியையும் கட்டடத்தையும் பெற்றுக் கொடுத்தார்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கோப்பாய் மகாவித்தியாலயம், மட்டுவில் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் சிரேஷ்ட ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி அவற்றின் தரத்தை உயர்த்தவும், சிறந்த மாணவமணிகளை உருவாக்கவும் அவர் தவறவில்லை.

தனது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் கரவெட்டி வெல்லன் விநாயகர் ஆலயத்தின் முகாமையாளர் பதவியை ஏற்று அதன் நிர்வாகத்தைத் திறம்பட நடாத்தினர். அதே ஆலயத்திற்கான அபிடேகப் பொருட்களை வாங்கவேண்டுமென்ற தணியாத வேட்கையுடனும், சந்தர்சஷ்டிவிரதத்தை தமிழகத்தின் புனித ஆலயமொன்றில் அனுட்டிக்கவேண்டும் என்ற ஆவலுடனும் வித்துவான் நடராசா தனது உடல் நிலையையும் அலட்சியம் செய்து தமிழகம் சென்ருர். அதுவே அவரது கடைசி யாத்திரையாகியது.

முருகப்பெருமானின் திருத்தலங்களுக்குட் சிறந்த திருச்செந்தூரில் வித்துவான் இறைவனுடன் சங்கமமானுர்.

அவரது நீண்ட நாட்கனவாக, கரவை வெல்லன் விநாயகர் ஆலயத்தில் ஓர் இராசகோபுரம் அமைக்கவேண்டும் என்ற அவரது பேரவா நிறைவேறுதுவிடினும் அதற்காக அவர் சேகரித்துவிட்டுச் சென்ற ரூபா 15,000/-மும் தனது சொந்தப் பங்காக விட்டுச் சென்ற காசோலையும் அவரது ஆத்மாவுக்குச் சாந்தியளிக்கும்.

"இருந்தமிழே யுன்னலிருந்தேன்" என்ற தனது தாரக மந்திரத்திற்கமைய தனது விலைமதிப்பரிய நூல்களை யாழ். பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்புச் செய்யவேண்டும் என்ற பெருநோக்கைத் தமது உறவினரும் நல்லூர் எம். பி யுமான திரு மு. சி. சிதம்பரத்திடம் தெரிவித்துள்ளார் என அறியக்கிடக்கின்றது.

அவரது ஆத்மா சாந்தியடைக.

... வ. மகாலிங்கம் (ஈ)

## "எமது கோரிக்கையை முதலாளிமார்ஏற்றுள்ளனர்' இ. சு. தொ. சங்கத்தலைவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

"இலங்கையிலுள்ள 50க்கும் அதிகமான சுருட்டு முதலாளிகளைக் கொண்ட சங்கக் கூட்டத்தில் இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கம் முன்வைத்துள்ள 65ரூபா சம்பள உயர்வை 37 முதலாளிமார்கள் ஆதரித்துள்ளதாகத் தெரிய வருகிறது",

இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் பேசிய மேற்படி சங்கத்தலைவர் திரு. மா. க. முதலியார் மேற்கண்டவாறு கூறினர்.

இக்கூட்டம் தாவடியிலுள்ள சங்கப் பணிமனையில் தலைவர் திரு மா. க. முதலியார் தலைமையில் நடைபெற்றது. ரு. முதலியார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"அரசு விடுத்துள்ள விசேடபடியான 70 ரூபா சம்பள உயர்வை அடுத்து எமது தொழிலாளர்களால் சுருட்டப்படும் எத்தரவழியான 1000 சுருட்டுக்கும் 35ரூபா சம்பள உயர்வை எமது சங்கம் கோரியுள்ளது. எமது கோரிக்கை நியாயமானது என்பதை உணர்ந்த முதலாளிமார் தொழிலாளர்களுக்கு நாம் கோரிய சம்பள உயர்வை வழங்க விருப்பம் தெரிவித்துள்ளர். ஏனைய முதலாளிகள் சம்பள உயர்வை மறுப்பதன் காரணம் என்ன?

"கடந்த சம்பள உயர்வுப் போராட்டத்தின் போது சுருட்டுத் தொழிலாளர்களின் பொதுச் சபைக் கூட்டத்தில் நிர்ணயித்த சம்பளத்தை முதலாளிகளிடமிருந்து எமது சங்கம் பெற்று கொடுத்தது மட்டுமல்லாது சம்பள நிர்ணய சபை அதிகாரிகளை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து சம்பள உயர்வைச் சட்டமாக்கியது" என்று கூறினுர்.

சங்க உப செயலாளர் திரு. செ. தம்பிராசா பேசுகையில்: முதலாளிமார் எமது சங்கம் கோரிய சம்பள உயர்வை கொடுக்க மறுத்தால் ஒரு பொதுவேலைநிறுத்தம் ஒன்றை நடாத்தத் தயங்கமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹா[லி]ன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சுந்தரராஜன்-ஜெய்சங்கர்
நீதிதேவன்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 2-15
ஞானக்குழந்தை

கடைசி வாரம்
வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி-சரோஜாதேவி
பாகப் பிரிவினை

SANTHI (JAFFNA) DAILY 5 SHOWS
10-00, 1-00, 4-00, 7-00 & 10-00
★ CHARLES BRONSON ★ JIM BROWN
"THE DIRTY DOZEN"
ACTION PACKED COLOR MOVIE

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி10-30, 2-00, 6-00 & 930
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
மீனவநண்பன்

வின்ஸர் (யாழ்நகர்)
Daily at 10-30 A.M., 2-30, 4-30, 7-00 & 9-30 P.M. only
★ BARRY NEWMAN ★ SUZY KENDALL
in
FEAR IS THE KEY
Scope-Color Thrill & Action

ராணி (யாழ்நகர்)
Daily 10-30, 2-15, 4-30, 7-00 & 9-30
TODAY ONLY
EVELYNE KRAFT, LI H SIU-HFIEN
in
MIGHTY HIMALAYANMAN
AN EXPLOSIVE MOVE
நாளைமுதல்
ஒரு தலை காதல்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜனத்திரள் நிறைந்த 4வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
ஒரேவானம் ஒரேபூமி
(வண்ணக்கலர்)

ராஜா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30
இமயம் முதல் குமரிவரையுள்ள பல நூற்றுக் கணக்கான புனித ஸ்தலங்களை உள்ளடக்கியதும், தனக்கேற்பட்ட துன்பங்களை தூசியென எண்ணி தான்கொண்ட தெய்வபக்தியே மேல் என நினைத்த ஒரு பக்தனின் கதைதான் 'சுப்ரபாதம்.'
என்றுமில்லாதவாறு காட்சிக்கு காட்சி ஜனத்திரள் நிறைந்து காட்சியளிக்கிறது.
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
சுப்ரபாதம்
(ஈஸ்ட்மன் கலர்)

# "திடகாத்திரமான உடற்பயிற்சி உள்ளத்துக்கும் உடலுக்கும் சிறந்தது"

## - வடபிராந்திய பொலிஸ் அதிபர்

(கோண்டாவில்)
"அரசாங்க உத்தியோகம் பார்ப்பது கஷ்டம் என்று இன்று பலர் கூறுகின்றார்கள். இதிலும் பார்க்க தனியான முறையில் வர்த்தகம் அல்லது வேறு தொழில்களில் ஈடுபடுவதன்மூலம் அதிகபணத்தைச் சம்பாதித்துக் கொள்ள முடியும். விளையாட்டு வீரர்கள் தமது விளையாட்டு நேரத்தில் ஒருவரையொருவர் எதிர்த்து எது வந்தாலும் தயார் என்ற நிலையில் தம்மை மறந்து விளையாடுகின்றார்கள்" இவ்வாறு வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு பி. மகேந்திரன் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் இறுதி உதைபந்தாட்டப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:- "இன்று மாணவர்கள் பாடசாலை முடிவடைந்ததும் எந்த ஒரு விளையாட்டுப் பயிற்சிக்கும் பாடசாலையில் தரித்து நிற்பது கிடையாது. இவர்கள் உடன் வேறு தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்றுவிடுகின்றார்கள். சில காலங்களுக்கு முன்னர் மாணவர்கள் வேலை வேண்டும் என்ற நோக்கம் கொண்டு படித்தார்கள். ஆனால், இன்று பலவேறு வகையான தொழில் நுட்ப முறையில் அமைந்த வேலை வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மனிதர்களுக்கு திடகாத்திரமான உடற்பயிற்சி உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மை பயக்கும்" என்றார்.

யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத் தலைவர் திரு. சாரி உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கு திருமதி எஸ். மகேந்திரன் பரிசில்களை வழங்கினர். (வெ)

# இன்றைய பலன்

கார்த்திகை மாதம்
26-ந் திகதி வியாழக்கிழமை
11-12 80

மேடம்: அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் அறிஞர்களின் தொடர்புகளும் உண்டாகலாம். பொருள்வரவிற்கும் இடமுண்டு சிறப்பான தினம்.

இடபம்: நீண்டநாள்களின் பின் இன்று நிறைவான தினம் எதிர்பார்த்த பொருள் இன்று கைவந்து சேரும். பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் மாரனின் கணை தாக்கும்.

மிதுனம்: பகைமூட்டம் வட்டமிடும் வீணானவார்த்தைகளால் மனம் புண்படும் தொழில்துறையிலும் முட்டுக்கட்டை தோன்றலாம் மனத்திடம்வேண்டும்.

கடகம்: காத்திருந்த கண்களுக்குக் களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கலாம். சகோதர வழியால் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு. காதலர்களுக்கும் பொன்னான நாள்.

சிங்கம்: விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும். இன்று பொறுமையோடு இருப்பதே நன்று

கன்னி: இன்று பொருளாதாரத்துறை திருப்திகரமாக இருக்கும். தந்தை வழியால் நற்செய்தியும் வந்துசேரும் பெரியவர் ஒருவரின் ஆதரவு உங்கள் முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும்.

துலாம்: வியாபாரத்துறையில் துரிதமுன்னேற்றம் புதுத்துறைகளில் மனம் நாடுதல பயன்தரும் பிரயாணம் நண்பர்களின் ஆதரவு இவற்றுடன் தெய்வத்தின் துணையும் உண்டு

விருச்சிகம்: பொதுத்துறைகளில் நாட்டம் செல்லும். மக்களின் ஆதரவும் கிடைக்கும் அரசியல் வாதிகளுக்குச் செல்வாக்குப்பெருகும். பெரிய இடத்துத்தொடர்புகளும் உண்டாகும்.

தனுசு: தொழில் புரியும் இடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றக்கூடும் கொடுக்கல் வாங்கல் மூலம் பகையைத் தேடிக்கொள்வீர்கள். பொருள் விடயத்தில் கவனம் செலுத்தவும்.


மகரம்: பலவழிகளிலும் பொருள் நழுவப்பார்க்கும். திருடர் பயத்திற்கும் இடமுண்டு. விவசாயிகள் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும். கணிப்பிணக்குகளும் தோன்றலாம்.

கும்பம்: பேச்சுவன்மையின் மூலம் பெரிய இடத்து ஆதரவைத் தேடிக்கொள்வீர்கள். குடும்பத்தில் சுவையான நிகழ்ச்சிகள் இடம் பெறும் திடீர் வரவிற்கும் இடமுண்டு

மீனம்: சுறுசுறுப்புக் குன்றும் உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள் கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகரிக்கும் அமைதி நன்று

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

வெலிங்டன் அல்ல — வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2-30
சிவாஜி
காவல் தெய்வம்



ஒரு புலியிடம் புள்ளிமான் சிக்குத் தவிக்கிறதா? அல்லது ஒரு வெள்ளாடு வேங்கையிடம் சிக்கித் தவிக்கிறதா? ஈழத்துப் படமான 'ஒருதலை காதல்' திரைப்படத்தில் ஒரு காட்சி இது.

# இலங்கை சாரணிய சங்க தேசிய தலைவர் பயிற்றுனர் பயிற்சி

(யாழ்ப் நகைப்)
உலக சாரணிய சங்கத்தினதும், இலங்கை மன்றக் கல்லூரியினதும் அனுசரணையுடன் இலங்கை சாரணர் சங்கம் தனது இரண்டாவது தேசிய தலைவர் பயிற்றுனர்களுக்கான பயிற்சி நெறியை நவம்பர் மாதம 26-ம் திகதி தொடக்கம் டிசம்பர் 3-ம் திகதிவரை இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்தியது. இலங்கையின் பலவேறு மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 23 உதவி தலைவர் பயிற்றுனர்கள் இப்பயிற்சியைப் பெற்றனர். இவர்கள் கடந்த ஒரு வருட காலமாக பயிற்றுனர் அபிவிருத்தித்திட்டம் என்னும் ஓர் ஆராய்ச்சி செயல் திட்டத்தில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தேசிய பயிற்சி ஆணையாளர் திரு. பி. எஸ். ஆர். இராஜமணி இந்நெறியின் தலைவராகவும், தலைவர் பயிற்றுனர் திரு. ஏ. வி. பாலசுப்பிரமணியம் பதில் தலைவராகவும் கடமையாற்றினர். பயிற்சி நெறியை உலக சாரணர் சங்க பயிற்சி இயக்குநர் திரு. பிலிப் பியோலே வழிப்படுத்தினார் உலக சாரணர் சங்க ஆசிய பசுபிக் பிராந்திய இணைப்பு பிரமுகர் திரு. வி. பி. தவான் பயிற்சி இணைப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றினர். பயிற்சி ஆசிரியர்களாகவும் ஆலோசகர்களாகவும் தலைவர் பயிற்றுநர்கள் திருவாளர்கள் நிகால் டி மெல், வரப்பிட்டியா, ஆரியபால, ஸ்ரீகிருஷ்ணராஜா, கே செல்வவிநாயகம், திருமதி நீற்று எலோபோல பணிபுரிந்தனர்.

இப் பயிற்சி நெறியில் யாழ் மாவட்டத்திலிருந்து திரு. நா. நல்லையா (யாழ்ப்பாணம்), திரு. க. எஸ் அரசரத்தினம் (சாவகச்சேரி), திரு. பி. சிறிஸ்கந்தராசா (கரவெட்டி) திரு. சி. எஸ் சுப்பிரமணியம் (காங்கேசன்துறை) கலந்து கொண்டனர். இவர்கள் பயிற்சியை முடித்துக் கொண்டமைக்கான சான்றிதழ்களை உலக சாரணர் சங்கப் பயிற்சி இயக்குநர் திரு. பிலிப் பியோலோ வழங்கினார். சாரணப் பயிற்சி நெறிகளில் இதுவே அதி உயர்ந்த பயிற்சி நெறியென்பது குறிப்பிடத்தக்கது.

## ஓய்வுபெறுகிறார்

(அரியாலை)
ஹட்டன் ஹைலண்ட் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிய திருமதி சிவசிதம்பரம் அதிபர் பதவியிலிருந்து இளைப்பாறுகிறார்.

இவர் இக்கல்லூரியில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்து அதிபராசப் பதவியுயர்வு பெற்று கடந்த மூன்று வருடங்களாக கல்லூரியின் அதிபராசப்பணி புரிந்தார். ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் சார்பில் இளைப்பாறும் அதிபருக்கு பிரியுபசாரம் அளிக்கப்பட்டது.

## பஞ்சாப் முதலமைச்சர் உறுதி

புதுடில்லி, டிச. 10
மாணவர்களின் கோரிக்கைகளை அனுதாபத்துடன் பரிசீலிப்போமென்று பஞ்சாப் முதலமைச்சர் திரு. தர்பாராசிங், உறுதியளித்துள்ளார். (வெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பளிப்பு

கொடுக்கும் வியாபாரிகளுக்கும், விற்பனையாளர்களுக்கும் விசேஷ கழிவு:-

**கலண்டர் வகைகள்**

தினசரி: மெய்கண்டான்-லீலா-சுசி, பூபாலசிங்கம் பஞ்சாங்கக் கலண்டர், திருக்கணித பஞ்சாங்கக் கலண்டர் — ராஜம், சியம் மாதக் கலண்டர்.

மொத்த விற்பனையாளர்:

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

யாழ்ப்பாணம். T'Phone: 7631



# ஈழநாடு

The Eelanaadu 60 சதம்


## சூரசங்காரம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் பழம்றோட் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவிலில் நடைபெற்று வரும் லக்ஷார்ச்சனையை ஒட்டி நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு கஜமுக சூரசங்காரமும் கணபதி ஹோமமும் நடைபெறும்.

## இருல் பதனிடும் தொழிற்சாலை

(பச்சிலைப்பள்ளி)

முல்லைத்தீவில் இருல் பதனிடும் தொழிற்சாலை அமைத்துத் தருமாறு முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கம் வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினை கேட்டுள்ளது.


## அன்பளிப்பு

கொடுக்கும் வியாபாரிகளுக்கும், விற்பனையாளர்களுக்கும் விசேஷ கழிவு:-

**டயறி வகைகள்**

பூபாலசிங்கம், லேக்கவுஸ் புக்ஷொப், சிவலி, அசோசியேற்றட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டற், லீலா - மெய்கண்டான் - றிச்சாட் அன் கோ, ராஜம், சாளையன் றீவில்ஸ், வீரகேசரி, திருக்கணிதம் ஆகியனவைதெரிவு செய்யுங்கள்.

மொத்த விற்பனையாளர்:

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

யாழ்ப்பாணம். T'phone: 7631


## இப்படியும நடந்தது!

# குறைவாக வந்த வினாத்தாள்கள்!

(வவுனியா)

வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விஞ்ஞான பாடத்திற்கான க. பொ. த பரீட்சையின் போது 100 வினாத்தாள்கள் குறைவாக அனுப்பப்பட்டிருந்ததாம்!

இதனால் பரீட்சைக்குத் தோற்றிய 127 பரீட்சார்த்திகளுக்கும் இரண்டு பகுதிகளாகப் பரீட்சை நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது!

127 பரீட்சார்த்திகளுக்கும், 135 வினாத்தாள்கள் அனுப்பப்படவேண்டியது வழக்கம். (மேலதிகமான எட்டு வினாத்தாள்களும் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கென அனுப்பப்படுவது வழக்கம்) ஆனால் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து வந்த பார்சலில் 35 வினாத்தாள்கள் மட்டுமே இருந்தனவாம்!

கிடைத்த 35 வினாத்தாள்களையும் கொண்டு முதலில் ஒரு பகுதியினருக்குப் பரீட்சை நடத்தப்பட்டது. மிகுதிப் பரீட்சார்த்திகளை ஒரு மண்டபத்தில் தடுத்து வைத்திருந்து, பின்னர் அவர்களுக்கு பரீட்சை நடத்தப்பட்டதாம்.

சிங்கள விஞ்ஞான பாடத்தின் 2-ம்பகுதி நடைபெற்ற பொழுதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. முதல் பகுதியினருக்கு பரீட்சை நடைபெற்ற நேரத்தில் அருகில் இருந்த பரீட்சை நிலையங்களில் இருந்தும் சில வினாத்தாள்கள் இரவல் வாங்கியதாகவும் தெரிய வருகிற.

# யாழ்ப்பாணத்தில் பொலிஸ் ராணுவத்தின் சித்திரவதை

## சர்வதேச மன்னிப்புச்சபை தகவல்

(கொழும்பு)

"யாழ்ப்பாணத்தில் அவசர காலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டு ஒரு சில நாட்களில் பொலிசாரும் இராணுவத்தினரும் அங்கு பலவகையான சித்திரவதைகளை மேற்கொண்டனர்'' என்று யாழ்ப்பாணத்தில் அவசரகாலச்சட்டம் பிரகடனம் செய்யப்பட்டவுடன் நிகழ்ந்ததாக கூறப்படும் சம்பவங்கள் பற்றி சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள 1980ம் ஆண்டுக்கான தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபை இது தொடர்பான மகஜர் ஒன்றையும் [illegible] அறிக்கையையும் இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது. அந்த மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது: "ஆட்களைத் தலைகீழாகக் கட்டித் தூக்கியது. அப்படியான நிலையில் அவர்களது தலையை ஒரு பைக்குள் திணித்து எரியும் மிளகாயில் இருந்துவரும் காரத்தைச் சுவாசிக்கவிட்டது. அவர்களைக் கடுமையாக அடித்தது. நகத்துக்குள் ஊசி திணித்தது. உடலிலுள்ள உணர்ச்சியான பகுதிகளில் மிளகாயைப் பூசியது. கொலை செய்யப்போவதாகப் பயமுறுத்தியது''.

விஸ்வஜோதிரத்தினம் (இன்பம்) செல்வரத்தினம் ஆகிய இரு இளைஞர்களின் சடலங்களும் சிதைவடைந்த நிலையில் 1979ம் ஆண்டு ஜூலை மாதம் 14ம்திகதி காலை யாழ்ப்பாணத்திற்கு அண்மையிலுள்ள பாலமொன்றிற்கு கீழ் காணப்பட்டது "குறித்தும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கின்றது.

இவர்களுடைய மரணம் தொடர்பாக விசாரணையை நடத்துமாறு அது அரசாங்கத்தைக் கேட்டுள்ளதுடன், காணமல் போனதாகக் கூறப்படும் திரு. எஸ் பரமேஸ்வரன், திரு. எஸ். ராஜேஸ்வரன் திரு. ராஜகிளி, திரு. ஆர் பாலேந்திரன் ஆகியோர்பற்றி புலனாய்வு செய்யும்படியும் கேட்டுள்ளது. இவாகள் நால்வரும் 1979ம் ஆண்டு ஜூலை மாதம் 14ம் திகதி கைது செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது.

இந்திரராஜா என்ற இளைஞன் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ந் திகதி கைது செய்யப்பட்டு, அடுத்த நாள் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ந் திகதி அங்கு மரணமானார்.

இவரின் மரணம் தொடர்பாக விசாரணை செய்த யாழ் மஜிஸ்டிரேட் இவர் பொலிசாரினால் தாசகப்பட்டதற்கான சாட்சியங்கள் இருப்பதாக 1980-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் திகதி வழங்கிய தீர்ப்பில் தெரிவித்துள்ளார்" என்றும் அச்சபை தனது மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

## பயிற்சி

றேடியோ-ரெலிவிசன், ஏயர் கொண்டிசனிங் மூன்று மாத டிப்ளோமா பயிற்சி. அனைவரும்சேரலாம். 15-12-80 வரை மாணவர் அனுமதிக்கப்படுவர். நேரில்வரவும். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 7577

## மரண அறிவித்தல்

மூன்னாள் சமாதான நீதவான் சபாபதிப்பிள்ளை கந்தசாமி காலமானார். ஈமைக்கிரியைகள் இன்று பி. ப. 4மணிக்கு 154, கஸ்தூரியார் வீதியில் நடைபெற்று அன்னாரின் புதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். 7557

## கதிரியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவருமான திரு சி. கதிரவேலுப்பிள்ளை முயற்சிகளை மேற்கொண்டதுடன் அந்த நூல்களைச் சுன்னாகத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்குக் கொண்டு வந்து சேர்ப்பதிலும் தமது ஜீப் வாகனத்தையே பயன்படுதத வழிசெய்தாராம்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பயன்படக் கூடிய பலநூல்களைச் சுமந்துகொண்டு யாழ். பல்கலைக்கழக வளவுக்குள் நுழைந்த கோப்பாய் எம். பின் ஜீப்வண்டியில் பறந்து கொண்டிருந்த உதயசூரியன் கொடியைப் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த மாணவர் சிலர் கிழித்தெடுத்ததுடன் அந்தஜீப் வண்டியிலிருந்த திரு கதிரவேலுப்பிள்ளையின் 13 வயது மகனையும் ஜீப் சாரதியையும் தாக்குவதாகப் பயமுறுதியதாகவும் கூறப்படுகிறது. இது பற்றிய செய்தி கிடைத்தபோது திரு. கதிரவேலுப்பிள்ளை உதவி செய்யப் போய் உபத்திரவம் கிடைத்திருக்கிறது. இதுவும் நன்மைக்கே என்று கூறினராம்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 14-1-1915 மறைவு 4-12-1980

### குலத்துங்கம் இராஜகுலசிங்கம்

(இளைப்பாறிய மானிப்பாய் கிராம விதானையார்)

இவர் காலஞ்சென்ற மானிப்பாய் விதானையார் குலத்துங்கம், திருமதி சிவக்கொழுந்துவின் சிரேஷ்ட மகனும், அமிர்தவல்லியின் அன்புக் கணவரும், இராஜயோகி, இராஜபுஷ்பவல்லி (கனடா) குலத்துங்கம் கனடா), இராஜமனோகரன் (கனடா), திருமதி விஜயநாதன் (கனடா), இராஜமனோகரி, இராஜகுலேந்திரன் (மேற்கு ஜேர்மனி), சுபாஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயநாதன், இரஞ்சினிதேவி ஆகியோரின் மாமனரும், நந்தினி, சாந்தினி, சேன், றதீஷ்குமார், மதன், கார்த்திகரன், சர்மிலி ஆகியோரின் பேரனும், திருமதிகள் கன்று, கனகசபாபதி, காலஞ்சென்ற புஷ்பமலர், சிவஞானம், இராஜவல்லபன், அரசகுலசிங்கம், ஆகியோரின் காலம்சென்ற விஜபகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவநாதன், திருமதி பரமேஸ்வரன், லோகநாதன் திருநாதன், சோதிநாதன், காசிநாதன், பாலேந்திரா, திருமதி இராஜேந்திரா (லண்டன்), யோகரத்தினம் (சவுதி), பாலச்சந்திரன் (சவுதி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் வியாழக்கிழமை (11-12-1980) காலை 9 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம். (7574)


நத்தார் - புதுவருடப் பண்டிகைகளை முன்னிட்டு

# விசேட மலிவு விற்பனை

| | பழைய விலை ரூபா | மலிவு விலை ரூபா |
|---|---|---|
| ★ பான்சி வெயர் (Pancy wear) | 140-00 | 115-00 |
| ★ ஸ்கேட் (Printed Skirt) | 95-00 | 60-00 |
| ★ லேடிஸ் பெல்ஸ் (Ladies Bells) | 120-00 | 100-00 |

[மேற்படி விலைகள் 20-12-1980 வரை மட்டுமே!]

★ உங்கள் தேவைகளுக்கு முந்துங்கள்

# லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்,

18, மின்சார நிலைய வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7664



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63- இலக்க அச்சகத்தில் டிசம்பர் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at General Post Office Sri Lanka. under No: GE 8948/78 The Eelanaadu P B. No: 49, TeleGrams: Eelanaadu, Phone: 389.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org